# காமராசரை
## ஏன் ஆதரிக்கவேண்டும்?

பெரியார் ஈ. வெ. இராமசாமி

[மதுரை மாவட்டம், சோழவந்தானில் "காமராசர் படிப்பகம்" திறந்துவைத்து நிகழ்த்திய தந்தை பெரியார் அவர்களின் சிறப்புரை.]

★

அறிவுக்கடல் பதிப்பகம்
4, மொட்டைக் கோபுரத் தெரு,
மதுரை.

விலை 0-35 காசுகள்

அச்சிட்டோர் :

சௌத் இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ்
54, தாசில்தார் பள்ளிவாசல் தெரு,
மதுரை.

# பதிப்புரை

**பெரியார் ஈ. வெ. இராமசாமி** அவர்கள் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தது ஏன்? எதற்காக?

பல ஆண்டுத் தொண்டிற்குப்பின் அக் காங்கிரசுக் கட்சியையே ஒழித்துக்கட்டுகிறேன் என்று கூறி கட்சியை விட்டு வெளியேறினாரே ஏன்? எதற்காக?

வெளியேறிய அவர் திராவிடர் கழகம் (சுயமரியாதை இயக்கம்) கண்டு அதன் வாயிலாகத் தற்போது வரை அயராது தொண்டாற்றி நிற்கிறாரே ஏன்? எதற்காக?

தற்போது சில ஆண்டுகளாக காங்கிரசுக் கட்சியை ஆதரித்து நிற்கிறாரே ஏன்? எதற்காக?

திராவிட மக்கள் நல் வாழ்வு பெற்றுத் திகழ வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான்.

உயர்திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தது ஏன்? எதற்காக?

தற்போது அதே கட்சியை ஒழித்துக் கட்டச் சுதந்திராக் கட்சியை அமைத்து ஊர் ஊராகச் சுற்றி அலைகிறாரே ஏன்? எதற்காக?

காங்கிரசுக் கட்சியை ஒழிக்க ஏனைய மாற்றுக் கட்சிகளின் ஒத்துழைப்பை வேண்டி நாடி ஓடி உழைக்கிறாரே ஏன்? எதற்காக?

ஆச்சாரியாரின் இனமாகிய ஆரியப் பார்ப்பன மக்கள் மட்டும் உயர் வாழ்வு பெற்றுத் திகழவும், இத் திராவிட நாட்டிலுள்ள ஏனைய இன மக்கள் எல்லாம் அவ்வாரியப் பார்ப்பனரின் காலடியில் நின்று குற்றேவல் செய்யும், சூத்திரர்களாகவே அடிமை வாழ்வு வாழ வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான்.

நேரிய உள்ளம் படைத்த எவரும் இவ்வுண்மையை மறைக்கத் துணியார். ஆனால், இந் நாட்டிலுள்ள அரசியல் சூதாட்டக் கட்சிகள் அத்துணையும், செய்திப் பத்திரிகைகள் அத்துணையும், உண்மையை மறைத்தும், திரித்தும். பேசியும், எழுதியும் மக்களை ஏமாற்றி வாழ்கின்றனர்.

இவ்வரசியல் ஏமாற்றுக்காரர்களிடமும், பத்திரிகைகாரர்களிடமும், மக்கள் ஏமாறாது விழிப்புடனிருக்க, விளக்கம் பெற,

**"காமராசரை ஏன் ஆதரிக்க வேண்டும்?"**

எனும், இந்நூல் உறுதுணையாக உதவும் எனும் நம்பிக்கையில், எமது பதிப்பகத்தினின்று வெளியிட்டுள்ளோம், படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்,

அன்பன்

**மா. செல்லப்பெருமாள்,**

*உரிமையாளர்:*

**அறிவுக்கடல் பதிப்பகம்**

**மதுரை.**

# காமராசரை ஏன் ஆதரிக்க வேண்டும்?

---

## காமராசர் படிப்பகத்திறப்பு விழா.

29—12—60 மாலை 4-30 மணி அளவில் சோழ வந்தான் இளைஞர் காங்கிரஸ் கமிட்டியாரால் கடை வீதியில் ஏற்படுத்தப்பட்டு உள்ள "காமராசர் படிப்பகம்" திறப்புவிழா நடைபெற்றது. இளைஞர் காங் கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. எஸ். திருப்பெருந் துரை அவர்கள் த்ந்தை பெரியார் அவர்களையும் விழா விற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசி, விழாவிற்குத் தந்தை பெரியார் அவர்களுடன் ஆரம்ப காலத்தில் காங்கிரசில் தொண்டாற்றிய திரு. முன காலா. பட்டாபிராம அய்யா அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

## திரு, முனகாலா பட்டாபிராமய்யா அவர்கள்

விழாவிற்கு திரு. பட்டாபிராமய்யா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், நமது நாட்டு மகான் என்று பெயர் பெற்ற பெரியார் அவர்களே! சகோதர சகோதரிகளே! இன்றைய தினம் எனக்கு ஓர் மகிழ்ச்சிக்குரிய நாள் என்றே கருதுகிறேன். நான் வழக்கமாகக் கூறப்படும் வழக்கத்தன்மையில் இப்ப டிக் கூறவில்லை. உண்மை உள்ளத்தோடு கூறுகி றேன். வரவேற்றுப் பேசிய தோழர் நான் பழம் பெரும் தேசபக்தர் என்றார். பழம்பெரும் தேச பக்தர் ஆன பெரியார் அவர்கள் கலந்து கொள்ளும்

கூட்டத்தில் நானும் கலந்து கொள்ளப் பேறு கிடைத்தமைக்கு பெரிதும் மகிழ்கின்றேன்.

## அக்காலத்திய சுயநலமற்ற தேச சேவை

கடந்த 40 வருடத்திற்கு முன் காங்கிரஸ் எப்படி இருந்தது? காங்கிரஸ்காரர்கள் எப்படி வேலை செய்தார்கள் என்பது இன்றைய இளைஞர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை; எண்ணிப் பார்த்தாலுங்கூடத் தெரியாது.

அன்று சேவை செய்தவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு என்று எதையும் எதிர்பாராமல் மனப் பூர்வமாக ஆவேசத்துடன் பாடுபட்டார்கள். பெரியார் அவர்கள் சாதாரண உடை உடுத்தி சாதாரண மக்கள் எல்லோருடனும் பழகி வந்தார்கள். முதுகிலே கதர் சுமந்து செல்லுவார்கள். பெரியார் அவர்கள் தமிழ் நாடு காங்கிரசின் செயலாளராகவும், தலைவராகவும் இருந்து பணியாற்றி வந்தவர் ஆவர்.

## மக்களைக் கவர்ந்த பெரியார்

அன்று பொது மக்களை கவர்ச்சி செய்த தலைவர்களில் பெரியார் அவர்களைக் காட்டிலும் வேறு சிறந்தவர் இல்லை என்றே சொல்லலாம். மேலே சாதாரணத் துண்டு மட்டுமே போர்த்திக் கொண்டு இருப்பார். அவரால் தமிழ் நாட்டின் காங்கிரசுக்கு ஏற்பட்ட உணர்ச்சி அவருடன் அன்று தொண்டு செய்தவர்களுக்குத்தான் தெரியும். அவர்களால்தான் உணரவும் முடியும்.

பெரியார் அவர்களிடம் எல்லா மக்களுக்கும் இன்றும் அன்பும் நம்பிக்கையும் உள்ளது. நமது முதல் அமைச்சர் காமராசர் அவர்களின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி இயங்கி மக்களுக்குத் தொண்டு செய்வது கண்டு பெரியார் அவர்கள் இன்றைய ஆட்சியை மனப்பூர்வமாக ஆதரிக்கிறார்கள்.

வயது முதிர்ந்த இந்த நிலையிலும் ஓய்வு ஒழிவின்றி மக்களுக்குப் பாடுபட்டு வருகின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

## வாழ்த்து மடல்

தந்தை பெரியார் அவர்களுக்கு சோழவந்தான் இளைஞர் காங்கிரசின் சார்பாக வாழ்த்து மடல் வாசித்தளிக்கப்பட்டது.

## காமராசர் படிப்பகம் திறந்து தந்தை பெரியார் அறிவுரை

பேரன்பிற்கு உரிய தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! இன்றைய தினம் இந்த சோழவந்தான் நகரில் நமது முதல் அமைச்சர் திரு. காமராசர் அவர்கள் பெயரால் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்ற படிப்பகத் திறப்பு விழாவிற்காக நாம் இங்கு கூடியுள்ளோம். இந்தப் படிப்பகத் திறப்பு விழாவிற்கு நீங்கள் வரவேண்டும் என்று எனது பழைய நண்பர் திரு சுப்பிரமணிய முதலியார் அவர்கள் குமாரர் திருப்பெருந்துறை அவர்கள் எழுதினார்கள். உடனே சிறிதும் யோசிக்காமல் ஒத்துக்கொண்டேன்.

தலைமை வகித்திருக்கும் பழைய, எனது அருமை நண்பர், திரு. முனகால பட்டாபிராமய்யா அவர்கள் என்னை மிகமிகப் புகழ்ந்து பாராட்டினார்கள். அது அவர் என்மீது கொண்டு இருக்கின்ற அன்பையும் பெருந்தன்மையினையும் காட்டுகின்றதே ஒழிய அவ்வளவு பெரும் புகழ்ச்சிக்கு நான் அருகதையற்றவன்.

## ஒரே கொள்கைக்குப் பாடுபட்டது

நாங்கள் இருவரும் ஒரே கட்சியில் அன்று இருந்தோம், ஒரே கொள்கைக்காகப் பாடுபட்டோம் என்றால் அவர்கள் சொன்னதுபோல் உள்ளும் புறமும் ஒத்த, தன்னலம் துறந்த, உண்மைத் தொண்டாற்றினோம்.

பிறகு இயற்கை உணர்ச்சி காரணமாக கருத்து உணர்ச்சி மாறுபட்டு வெளியே வந்து ஏதோ எனக்குச் சரி என்று பட்ட கருத்தை ஆதாரமாகக் கொண்டு அதற்காகப் பாடுபட்டு வருகின்றேன்.

இன்னமும் பழைய நண்பர்கள் கருத்து வேறுபாடு கால வேறுபாடுகள் கருதாமல், இப்படி அன்பு காட்டுவது பெரியோர்கள் இடத்தில் காணப்படும் சாதாரணப் பண்பாகும். இது அதிசயக் காரணமல்ல. நான் முன்பு குறிப்பிட்டதுபோல் இந்த நிகழ்ச்சிக்கு என்னை வரும்படி வாசகசாலை நிர்வாகிகள் அழைத்தார்கள். உடனே யோசிக்காமல்கூட ஒத்துக்கொண்டேன். கடிதம் எழுதியவர் எனது பழைய நண்பர் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களின், மகன் ஆவார் என்பது மாத்திரமே அல்லாமல், படிப்பகம்

காமராசர் பேரால் திறக்கப்படுகிறது என்ற காரணத்தினாலும் ஏற்றுக்கொண்டேன்.

## கொள்கையிலிருந்து நான் மாறுவதில்லை

சாதாரணமாக நான் ஏற்றுக்கொள்ளும் எந்தக் காரியத்திலும் கொள்கைகளை விட்டுவிலகாமல் குறிவைத்துப் பேசுவேன். பல சந்தர்ப்பங்களில் காங்கிரசையே தாக்கிப் பேசுவேன். காமராசரை ஏதோ நான் ஆதரிக்கிறேன் என்றால் காமராசரின் எல்லாக் கொள்கைகளையுமே ஆதரிக்கின்றேன் என்பதல்ல; அப்படியானால் நான் அவருடன் கலந்தே விடுவேன்.

## காமராசர் நாட்டுக்குச் செய்யும் நன்மைக்கே ஆதரவு

நமது முதல் அமைச்சர் காமராசர் அவர்களால் நமது நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும் அரிய நன்மைகளைக் கருதியே அவரை ஆதரிக்கின்றேன். எனவே காமராசர் அவர்களைப் பற்றிய காரியங்கள் எங்கு குறிப்பிட வாய்ப்புக் கிடைத்தாலும் நான் விட்டு விடுவதே இல்லை.

இப்படிக் காங்கிரசுக்காரர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட காரியமாயிற்றே; நீதான் காங்கிரசுக்கு மாறுபட்டவன் ஆயிற்றே, இன்று இங்கு ஏன் வந்தாய்? என்று சிலர் கேட்கலாம். இங்கு இல்லாவிட்டாலும் பொதுக்கூட்டத்திலாவது கேட்பார்கள்.

என்னை அறிந்தவர்களும், உணர்ந்து பின்பற்றுபவர்களும், உண்மையான காங்கிரசுக்காரர்களும் நீ

ஏன் இந்த நிகழ்ச்சிக்கு வந்தாய் என்று கேட்கமாட்டார்கள். பொறாமைக்காரர்கள்தான் கேட்பார்கள். அதை நான் லட்சியம் செய்வது இல்லை. நான் போனதில் ஒன்றும் அதிசயம் இல்லை. ஆனால் இவர்கள் என்னைக் கூப்பிட்டார்களே அதுதான் அதிசயம் என்பதோடு, எனக்குப் பெருமையுமாகும்,

எனக்கு எவர்மீதும் தனிப்பட்ட முறையில் பகையோ, துவேஷமோ இல்லை. மாலையில் பொதுக் கூட்டம் இருக்கின்றது. அங்குபல விஷயங்களைப் பற்றிப் பேச இருக்கின்றேன்.

## படிப்பகங்களின் அவசியம்

இங்கு படிப்பகங்களின் அவசியம்பற்றி சிறிது கூற நினைக்கிறேன். தோழர்களே! படிப்பகங்கள் என்பது எல்லோருக்கும் பொது. எந்த விதக் கருத்துக்கொண்டவர்களுக்கும் எந்த விதக் கட்சிக்காரர்களுக்கும், எந்தவிதக் கொள்கை வேறுபாடுகள் உடையவர்களுக்கும் இது பொருத்தமானதாகும்.

நாட்டில் பள்ளிக்கூடங்கள், உயர்தரக்கலாசாலைகள் எவ்வளவு இருந்தாலும் ஓரளவுக்குத்தான் அவைகள் மூலம் அறிவு வளரும். யார் அவைகளை நடத்தினாலும், ஓர் கட்டுப் பாட்டுக்கு, ஓர் வரம்புக்கு, அடங்கியது; இன்ன இன்னதுதான் சொல்லிக் கொடுக்க வேண்டும்; இன்ன இன்னதுதான் பாடத் திட்டம்; இன்ன இன்னது பாடத் திட்டத்தில் இருக்கக் கூடாது; என்றெல்லாம் கட்டுப்பாடு உண்டு.

## கல்விக்குறைவை நிரப்ப உதவும் படிப்பகம்

இத்தகைய ஸ்தாபனங்களில் படிப்பின் பயன் எல்லாம் ஏற்பட்டுவிடாது. இந்தக் குறைபாட்டை நிறைவுபடுத்துவதற்குப் பயன் படுவது இத்தகைய படிப்பகங்களேயாகும். இங்கு எல்லாக் கருத்துக்களையும் கொண்ட அறிவு நூல்கள்; எல்லாக் கருத்துக்களும் கொண்ட பத்திரிக்கைகள், எல்லாக் கருத்துக்களையும்கொண்ட உலகச்செய்திகள், பெரியவர் அவர்களின் கருத்துக்கள், தாராளமாக இருக்கும். அல்லது இருக்கவேண்டியது படிப்பகத்திற்கு மிக மிக அவசியமாகும்.

## படிப்பகம் பல்கலைக் கழகமே

சுருங்கச் சொன்னால் படிப்பகங்களை ஓர் சர்வ கலாசாலை என்றே கூறலாம். இங்கு மக்கள் அதிகமாக வந்து படிக்கும்படி, படிப்பகத்தார்கள் அக்கறை எடுத்துக்கொண்டு கவர்ச்சிகரமாகச் செய்ய வேண்டும். இப்படி இருக்குமானால் நமது காட்டுமிராண்டித்தனம், முரட்டுப் பிடிவாதம், தான்தான் உயர்வு என்கிற ஆணவம், இவை சீக்கிரம் மாற்றம் அடையும்.

இன்று உள்ள நூல் நிலையங்கள் என்பவைகளில் பெரும்பான்மை அரசாங்கத்தின் பணத்தை எதிர்பார்த்து நடப்பவைகள். எனவே அவைகள் அரசாங்கத்தின் ஆக்கினைகளுக்குட்பட்டு நடந்தாக வேண்டி இருக்கும். முனிசிபல், பஞ்சாயத்து இவைகளுக்குட்பட்ட நூல் நிலையங்களிலும்கூட இப்படித்

தான். இவைகளில் இன்ன இன்ன புத்தகங்கள், பத்திரிக்கைகள்தான் வாங்கவேண்டும் என்ற விதி இருக்கும்.

## சொந்த ஆராய்ச்சியே முக்கியம்

இம்மாதிரி படிப்பகங்களில் அப்படி அல்ல. ஒரு கருத்தினைக் கொண்டவர்கள் நடத்தினாலும், எல்லா விதக் கருத்துக்கள் கொண்ட பத்திரிக்கைகள் புத்த கங்கள் இடம் பெறலாம். இதனால் தமது கருத்துக்கு கொள்கைக்கு இது மாறுபட்டதாக ஆகிவிட முடி யாது. எல்லாக் கருத்துக்களையும் படித்து அவரவர் தங்களுக்கு உகந்ததை எடுத்துக்கொள்வார்கள். இம் மாதிரிப் படிப்பகங்களில் அன்றாடச் செய்திகளின் முக்கியமானதை எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம்.

தோழர்களே! நமது நாட்டில் இப்போதுதான் ஏராளமான படிப்பகங்கள் ஏற்படுகின்றன. அதற்கு முன் இவ்வளவு படிப்பகங்கள் காண முடியாது. இப் போதுதான் ஏற்படுத்த முடியும். காரணம் இப் போதுதான் நமது முதலமைச்சர் காமராசர் ஆட்சி யின் பயனாக மக்களுக்குப் படிக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகி இருக்கின்றது. படித்தவர் களுக்கும், அதிகமாக வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

## காமராசரால் படிப்பவர் தொகை அதிகரித்தது

வெள்ளைக்காரன் நமது நாட்டை 200 ஆண்டு கள் ஆண்டும் அந்த, கல்வி அறிவில் மேம்பட்ட அவன், ஆட்சியை விட்டுப் போகும்போது 1000-க்கு

10, 15 பேர்களேதான். காமராசர் ஆட்சிக்கு வரும் வரையில் கூட ஆண்களில் 100க்கு 15 பேர் களும் பெண்களில் 100க்கு 5 6 பேர்களும்தான் படித் திருந்தார்கள்.

100க்கு 15 படித்த மக்களுக்காக நாட்டில் எத் தனைப் படிப்பகங்கள் தோன்றமுடியும்? தோன்றி னாலும் படிக்க எத்தனை பேர்கள் இந்த 15ல் வரக் கூடும்? எத்தன்ன பேர்களுக்கு படிக்கவேண்டும் என்ற எண்ணமும் ஓய்வும் இருக்கும்? இந்த 15 பேர்களுக்கு ஆக எத்தனைப் பத்திரிகைகள் தோன்ற முடியும்.

## சாதிக்கொரு கோவிலும் பசனை மடமும்!

தோழர்களே! 1910-ல் ஈரோட்டில் ஒரே ஒரு (ரீடிங் ரூம்) படிப்பகம் இருந்தது. அங்கத்தினர்கள் 40 பேர்களே. அங்கத்தினர்களிடம் மாதம் $\frac{1}{4}$, $\frac{1}{2}$, வசூல் செய்து நடத்தப்பட்டது. அந்தக்காலத்தில் படிக்க வேண்டும், விசயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் சனங்களிடையே இல்லை. இந்த ரீடிங் ரூமுக்கு தினம் 20 பேர்கள் வந்தாலே பெரிய காரியம். அதில் பகுதிப்பேர் சீட்டு ஆட வருவார்கள்.

சாதி பாராட்டுபவர்கள், சாதிக்கோர் பசனைமடம், கோவில்தான் வைத்துக்கொண்டு விடாப் பிடியாக சாதிப் பெருமை காட்டிக் கொண்டு இருப்பார்கள். ஆனால் படிப்பகம் பள்ளிக்கூடம் பற்றிக் கவலைப் பட மாட்டார்கள். இதற்குக் காரணம் போதிய படிப்பு இல்லாததுதான்.

இன்று முன்புபோல் அல்ல; படிப்பு வளர்கிறது. யாருக்கும் கிடைக்க வகை ஏற்பட்டு விட்டது. மற்றைய ஜில்லாக்கள், நகரங்கள், பட்டினங்கள் எல்லாம் வெகு தூரம் என்று கருதிய நிலைமாறி, இன்று ரயில், மோட்டார், பஸ், ஆகாயவிமானம் தபால் தந்தி முதலியவைகள், நாடுகள் வெகு அண்மையில் இருக்கின்றன, என்று எண்ணும்படி செய்துவிட்டது. மற்றைய இடங்களில் நடக்கக்கூடிய செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளத்தக்க சாதனங்களும் பெற்று இருக்கின்றோம்.

## படிப்புத்தானே முக்கியம் ?

இவை எல்லாம் இருந்தும் மனிதன் படித்திருந்தால்தானே செய்திகளையும், கருத்துக்களையும், உணரமுடியும். இவைகள் பற்றியும் சிந்திக்கவும் முடியும். எனவே பலவிதக் கருத்துக்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றிச்சிந்தித்து, இது நல்லது, இது தீயது என்று காணக்கூடிய சக்தி எவனுக்கு இருக்கின்றதோ, அவன்தானே மனிதன் என்று கூறமுடியும்

## உலக அனுபவ அறிவே பெரிது

ஒரே தோலில் ஒரு சக்கிலி பத்துவிதச் செருப்புத் தைப்பது போல, ஒரு தங்கத்தில் பலநகை செய்வது போல,ஒரே பாட்டுக்கு பத்துவிதப் பொருள் பண்ணிக் காட்டிக் கொண்டுதான் இந்த நாட்டில் புலவர்கள் என்பவர்கள் பலர் இருக்கிறார்கள்; என்றாலும் அவர்கள் ஒரு தொழிலில் நிபுணர்களே ஒழிய, அறிவில் சிறந்தவர்கள் ஆகமாட்டார்கள். உலக சர்வ கலா

சாலை என்னும் படிப்பகத்தில் படித்தால்தான் அறிவாளியாக முடியும்.

அப்படிப்பட்ட வித்தைகள் படித்தவர்களுக்கு இன்று அறிவாளி என்று மரியாதை கொடுக்கப்பட முடியாது. ஆதலால் மக்கள் இப்படிப்பட்ட படிப்பகத்தில் படித்து, அறிவு பெற்றால்தான் அறிவாளியாக முடியும்.

தோழர்களே! இவ்வளவு பழம்பெரும் நாட்டில் நான் முன்பே குறிப்பிட்டது போல 100க்கு 25 பேர்களாவது இன்றுதான் பள்ளிப்படிப்புப் படிக்க முடிந்தது. மேல் நாடுகளில் எல்லாம் 20, 30, 50 ஆண்டுகளுக்கு முன்பே 80, 90,95 சத விகிதம் என்று படித்திருக்கிறார்கள். இந்த நாட்டிலும் மேல் சாதிக்காரர்கள் என்பவர்கள் மட்டுமே 50, 60 ஆண்டுகட்கு முன்பிருந்தே 100க்கு 100 படித்திருக்கின்றார்கள். ஏன்? எப்படி? என்று எவருமே சிந்திக்கவேயில்லை.

நான் உலக நாடுகள் பலவும் சுற்றி இருக்கின்றேன். அந்த அந்த நாட்டு மக்களின் நிலையையும் தெரிந்தவன். நான் மேல் நாட்டில் ஓர் ஓட்டலில் தங்கி இருந்தேன். பினாயிலும் தண்ணீரும் கலந்து, துணியால் நனைத்து, நிலத்தைத் துடைப்பது அந்த நாட்டு வழக்கம். இந்த நாடு போல சாணம் போட்டு மெழுகுவது இல்லை. அப்படித்துடைப்பவர் ஒரு கையால் பூமியில் துணியை இழுத்துக்கொண்டு, மறுகையில் பத்திரிகையினை வைத்துப் படித்துக்கொண்டே

துடைத்தான். ஆகவே வீட்டு வேலைக்காரனுக்கும் அந்த அளவு படிப்பும், படிப்பின் பயனும் தெரிகின்றது

தோழர்களே! இந்த நாட்டில் எந்தக்காலத்திலும் எவரும் செய்யாத அளவு காமராசர் அவர்கள்தான் துணிந்து கல்வி அறிவை அளிக்கின்றார். காமராசர் பதவிக்கு வருமுன், அருமை நண்பர் ஆச்சாரியார் அவர்கள் மூடிய 5000 பள்ளிகள்போக, அன்று இருந்தது சுமார் 10000 பள்ளிகளேயாகும்.

## பள்ளிகள் பெருக்கம்

ஆனதால் காமராசர் அவர்கள் பதவிக்கு வந்த பிறகு, இன்று 1960 ஆகஸ்ட் முடிய, உள்ள பள்ளிகள் 26300 ஆகும். இந்த 3, 4, மாதங்களில் இன்னும் 500, 1000 பள்ளிகளுக்குமேல் கூடியிருக்கும். இவர் பதவிக்கு வரும்போது உயர்நிலைப் பள்ளிகள் 637 தான். இவர் பதவிக்கு வந்தபிற்பாடு இன்று 1304 உயர்நிலைப் பள்ளிகளாக வளர்ந்திருக்கின்றன. காமராசர் அவர்கள் பதவிக்கு வரும்போது இந்த நாட்டில் 44 கல்லூரிகளே இருந்தன. நம் பிள்ளைகளுக்கு இடமே கிடைக்காது. இன்றோ, 57 கல்லூரிகளாக அது வளர்ந்து, கல்லூரிக்காரன் தங்கள் கல்லூரிகளில், இத்தனை இடங்கள் இன்ன இன்ன பாடம் படிக்க இடமுள்ளது, என்று விளம்பரம் போடும்படியாக உயர்ந்து இருக்கின்றது. இவைகள் பற்றி எல்லாம் பொதுக் கூட்டத்திலும் விளக்கமாகப் பேசுகின்றேன்.

## படிப்பகங்கள் துரிதப் பெருக்கம்

தோழர்களே! இராசாசி காலத்தில் கிளை நூல் நிலையங்கள் (BRANCH LIBRARIES) ஒன்றே ஒன்றுதான் இருந்தது. வேறு ஏற்படுத்தவேயில்லை. ஆனால் காமராசர் ஆட்சிக்கு வந்த பிற்பாடு இன்று 454 கிளை நூல் நிலையங்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

இந்த நூல் நிலையங்கள் சம்பந்தமான டெலிவரி ஸ்டேஷன்கள் என்பது ராஜாஜி காலத்தில் ஒன்று கூட இல்லை. இன்று காமராசர் ஆட்சியில் 575 புதிதாக ஏற்படுத்தப்பட்டு உள்ளன. வேறெவரும் செய்யாததை செய்தவர் காமராசர்.

1947ல் சுயராஜ்யம் வந்தது. வந்த 7, 8 ஆண்டுகளில் ஒன்றுமே ஏற்பட இல்லையே; இவர் வந்த பிறகுதானே இவைகள் எல்லால் ஏற்பட முடிந்தது. இவர் எவருமே செய்யமுடியாததை, செய்ய முடியாது என்றால் செய்யத்துணியாததை, செய்யப் பயந்ததை, நினைக்க முடியாததைச் செய்திருக்கின்றார்; செய்து வருகிறார்.

## இலவசக் கல்வி அளித்தார்

நம்பிள்ளைகள் படிக்கவில்லை என்றால் எதனால்? ஏழ்மையின் காரணமாகவேதானே. இதனை உணர்ந்து பிள்ளைகளுக்கு 8-ம் வகுப்புவரை சம்பளம் இல்லை என்று கூறிவிட்டார். அடுத்த கல்வி நடப்பு ஆண்டில் இருந்து எஸ். எஸ். எல். சி வகுப்பு வரையும் சம்பளம் இல்லை என்று செய்துவிட்டார்.

## நடுப்பகல் உணவு அளிக்கும் திட்டம்

சம்பளம் கொடுத்தால் மட்டும் போதுமா? பிள்ளைகளுக்கு உணவு ஒரு வேளை இனாமாகப் போட ஏற்பாடு செய்திருக்கிறார். இதன்படி ஏறத்தாழ இன்று 11 லட்சம் பிள்ளைகள் மத்தியான உணவு உட்கொண்டு படிக்கின்றார்கள். மற்ற பிள்ளைகளுக்கும் போடத் திட்டம் போட்டு இருக்கின்றார்.

சுதேசமித்திரன் பத்திரிகை எழுதியது, இது என்ன அன்ன சத்திரமா? பள்ளிக்கூடமா? சோத்துக்கில்லாத பிள்ளைகள் எல்லாம், படிக்க யோக்கியதை இல்லாத பிள்ளைகளையெல்லாம், பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்வதனால் தரமே கெட்டுவிட்டது; படிக்கவேண்டிய பிள்ளைகளுக்கு இடமும் வாய்ப்பும் குறைகிறது, என்று வயிற்றெரிச்சலுடன் எழுதியது

## குறும்புத்தனமான கேள்விகள்

இன்னும் சில அரசியல்கட்சிப் பொறாமைக்காரர்கள் கூறுவார்கள், காமராசர் சாப்பாடு போடுகிறார், பள்ளிக்கூடம் வைக்கிறார் என்றால் யார் அப்பன் வீட்டு முதல் எல்லாம் மக்கள் வரிப்பணம்தானே? என்று குறும்புத்தனமாகக் கேட்கின்றனர்.

ஆமாம். அவர் அப்பன் வீட்டு முதல் அல்ல; மக்கள் வரிப்பணம்தான்; அப்படி இருந்தும் ஏன் இதற்குமுன் இருந்த, இராசாசியோ மற்றவரோ செய்யவில்லையே? ஏன்?

இவர்களைச் செய்யவேண்டாமென்று எவர் கையைப் பிடித்துக் கொண்டார்கள்?

காமராசர் வரிப்போடுகிறார் என்றால் வரியை அவர் வீட்டுக்கே எடுத்துக்கொண்டா போகின்றார்? பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி; சாப்பாடு போடுகின்றார்; துணி வாங்கிக் கொடுக்கின்றார் என்றால் தங்கள் வீட்டுப் பிள்ளை குட்டிகளுக்கா? அல்லது அவரது நாடார் சாதிக்கா செய்கின்றார்? அவர்தான் மொட்டை மரமாயிற்றே. பெண்டாட்டி, பிள்ளை குட்டி, ஒன்றும் இல்லையே. தனக்கென்று ஏதாவது செய்துகொள்ளவேண்டிய அவசியம் அவருக்கு என்ன உள்ளது? ஆதலால் அப்படிப்பட்ட அவரது பெயரை இந்தப் படிப்பகத்திற்கு வைத்தது மிகவும் பொருத்தமானதும் பாராட்டவேண்டிய காரியமும் ஆகும், என்று கூறிப் படிப்பகத்தை திறந்து வைத்தார்கள்.

### சோழவந்தான் இளைஞர் காங்கிரசுக் குழு 29—12—60ல் போதுக் கூட்டத்தில் பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களுக்கு வாசித்தளித்த வரவேற்பிதழ்.

---

அஞ்சா நெஞ்சமும், தளரா உறுதியும், தன்னல மற்ற தொண்டும், வயிர உள்ளமும் படைத்த வைக்கம் வீரரே! வருக! வருக!! வருக!!! என மனமுவந்து வரவேற்கிறோம்,

நாட்டுப் பணியே நற்பணி யென்று கண்ட தாங்கள் 40 ஆண்டுகட்கு மேலாகவே, அரசியலிலும், சமூக வியலிலும் ஆற்றிவரும் வியத்தகு தொண்டு கண்டும் அதன் பயனாய் தாங்கள் அடைந்த அல்லல் களையும் கண்டு தென்னகமே பிரமிப்படைகிறது.

காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பெற்ற ஒத்துழை யாமை, சத்தியாக்கிரக இயக்கங்களில், தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் ஆற்றிய தொண்டு எங்கள் நெஞ்சில் இன்றும் நிலவுகிறது.

"சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்துவது என் கையிலில்லை. ஈரோட்டுப் பெண்மணிகள் இருவரிட மன்றோ இருக்கிறது" என்று குறிப்பாகத் தங்கள் துணைவியார் நாகம்மையாரையும், தங்கள் சகோதரி யையும் பற்றி, அகில இந்தியாவிலுள்ளவர்களுக்கு காந்தியடிகள் எடுத்தியம்பியது, எத்தகைய நம்பிக்கை யுடன் தாங்கள்தங்கள் குடும்பமும் தேசப்பணியாற்றி வந்தீர்கள் என்பதற்குச் சான்றாகவும், முத்திரை யிட்டதாகவுமன்றோ விளங்குகிறது.

போற்றுவோர் போற்றினும், புழுதி கொண்டு தூற்றுவோர் தூற்றியபோதும், நிலைகலங்காது மலையென இருந்துவரும் மாண்பே தமிழரின் உண் மைப் பண்பென நிரூபித்துக் கடமையே கண்ணெ னக் காத்துவரும் தங்கள் போக்கு எங்களைச் சிலிர்க்க வைக்கிறது.

தாங்கள் இந்த ஊருக்குப் புதியவரல்ல. ஒத்து ழையாமை காரணமாக எங்களூர்த் தலைவர்கள் சிறைவாய்ப்பட்ட காலங்களில், தாங்கள் இங்கு பன் முறை வருகைதந்து, ஊக்கமூட்டி, அயராமல் தெம்பு டனிருக்க எங்களுக்கு வகை செய்ததை, நாங்கள் மறவோம்,

தங்கள் பழைய வீடாகக் கருதிவரும் காங்கிரசில், இது சமயம் தாங்கள் இல்லாமலிருந்தும், நாட்டில் நல்ல ஆட்சி நிலவ, காமராசர் ஆட்சிதான் இருந்து வர வேண்டுமென்ற, அசையா உறுதியுடன் முழுமூச்சாக செயல் புரிந்து வருதல் கண்டு,' போற்றுகிறோம்; பூரிப் படைகிறோம்.

தள்ளாத வயதோ, டாக்டர்களின் அன்புக் கட் டளைகளோ, தங்கள் செயல் திறனைத் தடுக்க இயல வில்லை. தங்கள் உறுதி போற்றுதற்குரியது.

தாங்கள், இன்னும் பல்லாண்டுகள், நோயின்றி வாழ்ந்து. நற்பணி புரிய வேண்டுமென்று, எல்லாம் வல்ல சக்தியை இறைஞ்சுகிறோம்.

இளைஞர் காங்கிரசுக் குழு,
சோழவந்தான்.

---

# பொதுக் கூட்டம்

## ஊர்வலம்

தந்தை பெரியார் அவர்களை, காரில் அமரச் செய்து ஏராளமான பொதுமக்களும், காங்கிரசுத் தோழர்களும், அனுதாபிகளும் கையில் கதர்கொடி ஏந்தி "தந்தை பெரியார் வாழ்க! வைக்கம் வீரர் வாழ்க! முதலமைச்சர் காமராசர் வாழ்க! மக்களுக்கு கல்வி அளிக்கும் காமராசர் வாழ்க! காமராசர் ஆட்சி வாழ்க!–என்று வாழ்த்தொலிகளை எழுப்பிக்கொண்டு, முக்கிய வீதிகளின் வழியாகப் பொதுக்கூட்ட மைதானத்திற்கு, ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

## பொதுக்கூட்டம்

மாலை 6–மணிக்கு அரசஞ் சண்முகனார் அரங்கில், பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திரு. கே. ஆர். முத்து அவர்கள் தலைமை வகித்தார். பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து, இரவு 10-30 மணிவரையிலும் இருந்து, தந்தை பெரியார் அவர்களின், அறிவுரையினைக் கேட்டனர்.

## அன்பளிப்புகள்

கூட்டத்தில், தந்தை பெரியார் அவர்களுக்குப் பல்வேறு தாபனங்களின் சார்பாகவும், பிரமுகர்கள் அனுதாபிகள், கழகத்தோழர்கள், ஆகியவர்கள் சார்

பாகவும், வரவேற்பு இதழ்களும், மாலைகளும், மாலைகளுக்குப் பதில் ரூபாய்களும், அன்பளிப்பாக அளிக்கப்பட்டன. இளைஞர் காங்கிரசின் சார்பாக கதர் சால்வை ஒன்றும், பெரியார் அவர்களுக்குப் போர்த்தப்பட்டது.

## தந்தை பெரியார் பேருரை

அடுத்து, தந்தை பெரியார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- பேரன்புமிக்கத் தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! இன்றைய தினம் இந்த சோழவந்தான் பெருநகருக்கு, முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களின் பேரால், ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கும் படிப்பகத் திறப்பு விழாவிற்கு என்னை அழைத்தவர்கள், அப்படியே பொதுக்கூட்டம் ஒன்று, ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி, பெரும்பாலும் காங்கிரசுத் தோழர்கள், ஏற்பாடு செய்த காரியம் என்றே, இப்போது நான் அறிகிறேன், என்னைக் கூப்பிட்டவர், எனக்குப் பழைய நண்பர், திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களது மகன் ஆனதால், உடனே ஒத்துக் கொண்டேன். இது மாபெரும் கூட்டமாகவும், பல கருத்துடையோர் கூட்டமாகவும், காணப்படுகிறது. இப்படிப்பட்ட இந்தக் கூட்டத்தில் நான் எதைப் பற்றிப் பேசுவது என்பது, எனக்கு மயக்கமாக இருக்கிறது.

## பலருக்கு எதிர்ப்பாகும் என் கருத்து

நானோ, நாட்டு மக்களில் பெரும்பான்மையோர்கள் கொண்டு ஒழுகும், கடவுள், மதம், சாத்தி

ரங்கள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் முதலியவை களுக்கு, மாறான கருத்தினைக் கொண்டு, அவை களை ஒழிக்கவும், மாற்றவும், தொண்டாற்றுகிறவன். காங்கிரசுக்காரர்கள் என்றாலே, பெரிதும் இவை களைப் பற்றிய நம்பிக்கை கொண்டவர்கள் என்பது தான் பொருள். உதாரணமாக, நான் கூட்டத்திற் காக நாமக்கல்லுக்குப் போயிருந்தபோது, சிறு பிள்ளைகள் கையெழுத்து வாங்க, என்னைச் சுற்றிக் கூடி இருந்தார்கள், அவர்களில், ஒரு சிறுவன், நெற்றியில் பட்டையாய் விபூதி அடித்துக்கொண்டு, இடையில் சிகப்புப் பொட்டும் வைத்திருந்தான். நான் வேடிக்கையாக, அந்தப் பையனை "என்ன தம்பி உன் நெற்றியிலே?" என்றேன். அதற்குள், மற்ற பிள்ளைகள் சிரித்துக்கொண்டு, "அவன் காங்கிரசுக் காரனுங்க, அதனல்தான் அப்படி இருக்கிறான்" என்றனர்.

## காங்கிரசும் சாதியும்

எதற்காக இதை எடுத்துக் கூறுகிறேன் என்றால், அவ்வளவு தூரம் அவர்கள் நடத்தையும், நம்பிக்கையும், இருக்கும் என்பதற்கு ஆகவே, நாங்கள் மக்கள் சமுதாயத்தில் சாதிப்பிரிவு இருக்கக்கூடாது; அவை ஒழிக்கப்படவேண்டும் என்று கூறி, அவற்றை ஒழிக்கப் பாடுபடுகின்றோம் என்றால், காங்கிரசுக் காரர்களோ, சாதிபாதுகாக்கப் பாடுபடுபவர்கள்; ஆனல் சாதிபேதம் ஒழியவேண்டும் என்று முயலுப வர்கள்; நாங்கள், சாதி ஒழிப்பில் எப்படிப் பிடிவாத

மாகப் பாடுபடுகின்றோமோ, அதுபோல் சாதி ஒழியக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பதோடு, சாதி காப்பாற்றப்படும் என்று, சட்டமூலம் மக்களுக்கு உறுதிமொழி கொடுத்திருப்பவர்கள்.

நாங்கள், சட்டசபை, பார்லிமெண்டு ஆகியவற்றில் ஈடுபட்டு, மக்களிடம் ஓட்டுக்கு வராதவர்கள். காங்கிரசுக்காரர்கள் சட்டசபை. பார்லிமெண்டு ஆகியவற்றினை அடைய, தேர்தலில் ஈடுபடுபவர்கள். சற்றேறக் குறைய, இந்த நாட்டில் உள்ள எல்லாக் கட்சிக்காரர்களும், இதே கொள்கையைத்தான் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் காங்கிரசைப்பற்றித் தனிப்பட்ட முறையில், குறைகூற இடமில்லை, என்று சொல்லலாம். மற்றப்படி, இன்றைய நம்நாட்டுக் காங்கிரசு ஆட்சியில், இந்நாட்டுப் பெரும்பாலான மக்களுக்கு, கல்வி, உத்தியோகம், வாழ்க்கை வசதி முதலிய காரியங்களில், மற்றப் பல கட்சிகளைவிடத் தீவிரமான திட்டங்கள் போட்டுக்கொண்டு, வேலை செய்து வருவதைப் பாராட்டியே, இப்படிப்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டும், காங்கிரசை ஆதரித்தும், வருகிறேன். எனது பொதுவாழ்வில், எனது கருத்துக்களுக்கு மாறுபட்ட அனேகர், எனக்கு வேண்டியவர்களாகவும், அதுபோலவே அவர்களுக்கு நான் வேண்டியவனாகவும் இருப்பது போலவே, காங்கிரசுகாரர்களில் அநேகர் எனக்கு வேண்டியவர்களாக, என்னிடம் அன்பு கொண்டவர்களாக இருக்கின்றனர். நானும், அவர்களுக்கு நண்பனாகவும், அன்புடையவனாகவும்

இருக்கின்றேன். நமக்குக் கருத்து மாறுபாடு, கொள் கைமாறுபாடுகள், உடையவர்கள் ஆயிற்றே, அவர்கள் முகத்தைக்கூடப் பார்க்கக்கூடாது, என்பது மனிதப் பண்பு அல்ல. காங்கிரசு மீது பல குறைகள் சொல்லிக் கொண்டு அதை ஆதரிக்கிறேனே, என்று என் மீது வெகுபேருக்கு குறைபாடு இருக்கலாம். அது போலவே, சில காங்கிரசுக்காரர்களுக்காவது, "இராம சாமி, காமராசரை இப்படித் தாங்குகின்றானே, அவர் சாய்ந்து விடாமல் இவன் அல்லவோ, தாங்கிப் பிடித்துக் கொண்டு இருக்கிறான். இதனால் அல் லவோ, அவர் நம்மை இலட்சியம் செய்வதில்லை" என்றும் கருதலாம்.

"காமராசர் மட்டும் தனித்த ஆளாக இருந்தால் அவரை ஒரு கை பார்க்கலாம்; முடியவில்லையே" என்று இப்படி, காமராசர் போக்கில் அதிருப்தி அடைந்தவர்களும், காமராசரால் பலன் எதிர்பார்த்து ஏமாந்தவர்களும், ஆயாசப்படுவார்கள். உண்மைக் கொள்கைக்காரர்கள், உண்மைக் காங்கிரசுக்காரர்கள், அப்படி ஒரு நாளும் இருக்கமாட்டார்கள். இப்படிப் பட்ட நிலைமையைத் தங்கள் கொள்கைக்கும், இலட் சியத்திற்கும், ஆதாயமாகக் கருதுவார்கள். இன்று எங்களுக்கும், இவர்களுக்கும் (காங்கிரசுக்காரர்களுக் கும்) பெரிய, கிட்ட நெருங்க முடியாத, கருத்து வேற் றுமை இல்லை. சில இருக்கின்றன என்றாலும் அது பெரிதும் இந்த நாட்டுக் காங்கிரசு ஆட்சி யைப் பொறுத்ததல்ல. அது டெல்லிக் காங்கிரசு ஆட்சியைப் பொறுத்த காரியம் ஆகும்.

## காமராசருக்காகவே ஆதரவு

காமராசர் செய்யக்கூடிய காரியங்களுக்காக, நான், அவர் ஆட்சியை ஆதரிக்கிறேன். எனக்குக் காமராசர், யார் என்பதைப்பற்றிக் கவலை இல்லை. இது போன்றே, நான் யார் என்பது பற்றி அவருக்குக் கவலை இருக்காது. ஏற்படும் நன்மைகளைப் பெற்றுக் கொண்டு, நன்றி காட்டுவது மனித தர்மமாகும். என்னைப் பொறுத்தவரை, நன்மை என்று எனக்குப் பட்டதைச் செய்தவர்கள் யாராயிருந்தாலும், அவர்களை நான் வலியச் சென்று ஆதரிப்பதே, எனது வழக்கமாகி இருந்து வருகிறது.

அதற்கு ஆக, நான், எந்தவித மிகத் தீவிர யோசனை எதையும், எதிர்பார்ப்பதில்லை.

## நலம் புரிவோருக்கெல்லாம் ஆதரவு

நம் மக்களுக்கு நன்மைகள் செய்கின்றார்கள்; மக்கள் நலனில் கவலை உள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்று எனக்குத் தோன்றினால், அத்தகைய் காங்கிரசுக்காரர்களை நான் என்றும், ஆதரித்தே வந்து இருக்கின்றேன்.

## ஓமந்தூராருக்கும் வலியத்தந்த ஆதரவு

ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, சிறிதளவு தமிழர்கள் நலனில் அக்கறை கொண்டு, காரியமாற்ற முற்பட்டார். கோயில்கள், மடங்கள் முதலியவைகளின் சொத்துக்கள் பற்றிச் சில சட்டதிட்டங்கள்

ஏற்படுத்தி, அதனுள் கொண்டுவர முயற்சி செய்தார். அவரை, இந்த நாட்டுப் பார்ப்பனர்களும், பத்திரிகைகளும், எதிர்த்தன. சனாதனிகள் எல்லாம், கூப்பாடு போட்டனர். அவர், (ரெட்டியார்) எங்களை, மலையாளப் போலீசாரை விட்டுக் கால் ஒடிய, கை ஒடிய அடிக்கச் செய்திருந்தும், அவரை வலிய ஆதரித்தும், எதிர்ப்பாளர்களின் கூற்றுக்கு பதில் சொல்லிக் கொண்டும் வந்தோம். இந்த நாட்டுப் பத்திரிக்கைகள் இராமசாமி ரெட்டியார் அவர்களை 'தாடியில்லா இராமசாமி நாயக்கர்' என்று கூட எழுதின!

## பார்ப்பனச் சதியின் விளைவு

இராமசாமி ரெட்டியார் அவர்களே, திரு. வி. கலியாணசுந்தர முதலியாரிடம், "பெரியார் என்னை இப்படிப் புகழ்ந்து பேசுவதினாலேயே, இந்த நாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகளும். இந்த நாட்டுப்பார்ப்பனர்களும் என்னை எதிர்க்கின்றார்கள். தயவு செய்து அவரைக் கொஞ்சநாள் என்னைப் பற்றிப் பேசாமல் இருக்கும்படி, நான் கேட்டுக் கொண்டதாகச் சொல்லுங்கள்" என்று சொல்லியனுப்பினார். நான் அவரை ஆதரித்தது அவருக்காக அல்லவே! அவர் செய்த காரியத்திற்காகவேயாகும். அப்படி இருந்தும், அவரைத் தொல்லைப்படுத்தி விலகும்படிச் செய்துவிட்டார்கள்!

## காங்கிரசை நான் எதிர்த்துத் தோல்வியுறவும் செய்தேன்

கடந்த தேர்தலுக்கு முதல் தேர்தலில், நான் காங்கிரசு ஒழியவேண்டுமென்று ஓடிப் பாடுபட்டது,

எல்லோருக்குமே தெரியும். அப்படியே காங்கிரசைத் தோற்கும்படியும் செய்தேன். 5 பங்கு மெம்பர்களில் காங்கிரசு எதிர்ப்பாளர்களுக்கு 3 பங்கு இடமும், காங்கிரசுக்காரர்களுக்கு 2 பங்கு இடங்கள் மட்டுமே கிடைத்தன. காங்கிரசு மைனாரிட்டியாகவும், எதிர்ப்பாளர்கள் மெசாரிட்டியாகவும், வந்தார்கள்.

எதிர்ப்பாளர்கள் மெசாரிட்டியாக வந்தவுடனே, அவர்களுக்கு (மெசாரிட்டியாருக்கு) மந்திரி சபை அமைக்கணும், என்ற பதவி ஆசை எற்பட்டுவிட்டது! தேர்தலுக்கு முன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமலும், காங்கிரசுக்காரர்கள் மந்திரி சபை அமைக்க முடியாமல் செய்து, அவர்கள்மீது பொது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி செய்வது, என்பதுதான் பேசப்பட்டது.

## எதிர்ப்பாளரின் பதவி ஆசை

ஆனால் மெசாரிட்டியாக செயித்து வந்தபிறகு பதவிக்குப் போகணும் என்று ஆரம்பித்தது எனக்குப் பிடிக்கவில்லை. "இது நல்ல சந்தர்ப்பம்; விடக்கூடாது. போனால்தானே ஏதாவது செய்ய முடியும்" என்றார்கள்! நான் கூறினேன், "அப்படியானால் வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி, கல்வி, உத்தியோகம் முதலியவைகளை எல்லாம் அமுலாக்குவோம்," என்று திட்டம் போட்டுத் தீர்மானம் போடவேண்டும் என்றேன்.

## பொதுவுடைமையரின் வாக்கு மீறிய செயல்

அதற்கு இந்தக் கம்யூனிஸ்டுகள், தீர்மான உருவில் வேண்டியதில்லை; வேண்டுமானால் மந்திரிசபை அமைத்த பிறகு, 'பார்க்கலாம் என்று கூறினார்கள். இப்படிப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை, தேர்தலுக்கு முன்பே என்னிடம் இவர்கள் (கம்யூனிஸ்டுகள்) ஒத்துக்கொண்டவர்கள்தான். பிறகு இப்படித் திருப்பிக் கொண்டது, எனக்கு மிகவும் கோபமாக இருந்தது.

## உதைத்த காலுக்கு முத்தம் இடுவதா?

அதோடு மட்டுமல்லாமல், இந்தக் கம்யூனிஸ்டுகள் தான் மந்திரியாக இருக்கும்போது, சுட்டுத் தள்ளிய பிரகாசம்காரு, அவர்களை, முதன் மந்திரியாகக் கொண்டுவர வேண்டுமென்று, பிரயத்தனப்பட்டார்கள். இவைகளினால், எனக்கு மேலும் வெறுப்புண்டாகி, பத்திரிக்கையில் இவர்கள் யோக்கிதைகளை அம்பலப்படுத்தி எழுதியும். கூட்டங்களில் பேசவும் ஆரம்பித்தேன்.

இப்படிக் கருத்து வேற்றுமை இருப்பது கண்டும், எதிர்ப்பாளர்களெல்லாம் பல கட்சிகளைக் கொண்ட, கொள்கைகளைக் கொண்ட உதிரிகளாக இருப்பதினாலும், கவர்னர் அவர்களைக் கூப்பிட்டு மந்திரி சபை அமைக்கச் சொல்லாமல். ஒரே கட்சியாகவும், 5-இல் 2பங்கு பேர்களையே கொண்டதாகவும், மைனாரிட்டியாகவும், இருந்த காங்கிரசையே. கூப்பிட்டு மந்திரி சபை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

## சி. ஆர்க்கு ஆதரவு அளித்தது

நண்பர் இராசாசி அவர்களின் தலைமையில் மந்திரி சபை அமைக்க முயற்சி நடைபெறுவதாகக் கேட்டு "இந்தப் பிரகாசம் முதலமைச்சராக வருவதை விட இராசாசியே முதலமைச்சராக வருவது எவ்வளவோ மேல்" என்று கூறி, பத்திரிக்கையிலும் எழுதினேன்.

## சி. ஆர். பின் வழி நுழைவு

இராசாசி அவர்களும் தேர்தலில்கூட நிற்காதவர். நாமினேசனில் வந்து 5-ல் 3 பேர் கொண்ட மெசாரிட்டிகளுக்கு எதிராக, 5-இல் 2 பேர்களைக் கொண்ட, மைனாரிட்டியை வைத்துக் கொண்டு, மந்திரி சபை அமைக்கத் தொடங்கினார்.

'படையாட்சிக்கு ஒரு மந்திரி தருகின்றேன்; நீ இத்தனை பேரைக் கூட்டிக்கொண்டு வா,' என்றார், 'வெள்ளாலருக்கு ஒரு மந்திரி, நீ இத்தனை பேரைக் கூட்டிக்கொண்டு வா,' 'உனக்குப் பஸ் பெர்மிட்டு' 'உனக்கு லாரி பெர்மிட்டு' 'நீங்கள் எத்தனை பேரைக் கூட்டிக்கொண்டு வருகிறீர்கள்' என்றார். உடனே மளமளவென்று ஆட்கள் அவர் பக்கம் வந்துவிட்டார்கள்.

## கண்ட்ரோலை ஒழித்து ஆதரவைப் பெற்றார்

அவர் பதவிக்கு வந்ததும், அன்று மக்களுக்குத் தொல்லையாயும், அசவுகரியமாகவும் இருந்த, கண்ட்ரோல் முறையினை எடுத்தார். நாங்கள் இந்த முறை

ஒழிய வேண்டும் என்று கூப்பாடு போட்டவர்கள், காங்கிரசுக்காரர்களை தேர்தலில் தோற்கடிக்கக்கூட இதே பிரச்சினையை எடுத்துக் காட்டித்தான் தோற்கடித்தோம்.

ஆகவே ஆச்சாரியார் பதவிக்கு வந்ததும், கண்ட்ரோலை எடுத்துவிட்டார். ஆச்சாரியார் இப்படி எடுத்ததும், கம்யூனிஸ்டு, கண்ணீர்த் துளிகள் உள்பட எல்லாக் கட்சிக்காரர்களும், 'கண்ட்ரோலை எடுத்தது தப்பு' என்று, கண்டிக்கத் தொடங்கினார்கள். நாங்கள்தான், 'கண்ட்ரோலை எடுத்தது சரி' என்று ஆதரித்தோம்; ஆச்சாரியாருக்கு பாராட்டும் நன்றியும், செலுத்தினோம்.

எதிர்க்கட்சிக்காரர்கள், 'இப்படி எடுத்ததினால் விலை ஏறிவிடும்' என்றார்கள். நான், விலை ஏறினாலும் பரவாய் இல்லை; தானியமாவது பதுக்கப் படாமல், கள்ள விலைக்கு விற்காமல், தாராளமாகக் கிடைக்குமே. அப்படி விலை ஏறினாலும், ஒன்றும் கள்ள மார்க்கெட் விலையைவிட, அதிகம் ஏறிவிடாது' என்று சொன்னேன். அவரைப் பாராட்டி, எங்கள் மாநாட்டில், தீர்மானம் போட்டோம்.

### சி. ஆரின் இனவெறி

பிறகு இராசகோபாலாச்சாரியார் அவர்கள், தமக்குக் கொஞ்சம் ஆதரவும், போகும் இடங்களிலெல்லாம் கூட்டமும், வரவேற்பும் ஏராளமாய்க் கிடைக்கும் நிலை ஏற்பட்ட உடனேயே, இனவெறி பிடித்து, வர்ணாசிரம தர்மத்தை, அமுலில் கொண்டு நடத்த ஆரம்பித்தார். அதாவது நமது மக்களுக்கு கேடு பயக்கும், வர்ணாசிரம தர்மத்தை அமுலில்

கொண்டு நடக்கவாரம்பித்தார். அதாவது, நம் மக்களுக்குக் கேடு பயக்கும் வர்ணாசிரம கல்வித் திட்டத்தை-குலத் தொழில் திட்டத்தை கொண்டு வந்தார். அதன் காரணமாகவே அவரை எதிர்த்து ஒழிக்கும்படியாக நேர்ந்தது. இது பற்றிப் பிறகு விளக்குறேன்.

## காமராசரின் தமிழர் இனப்பற்று

அடுத்து, காமராசர் அவர்கள், பதவிக்கு வந்தார். வந்தவர் மக்களுக்கு இராசாசியால் இழைக்கப் பட்ட, கேடான வருணாச்சிரம கல்வித் திட்டத்தை மாற்றி, கல்வி, உத்தியோகம், முதலியவற்றில் நம் மக்கள் முன்னிலும் வளர்ச்சி அடையும்படியான காரியங்களைச் செய்து வருகின்றார். அதற்காகவே, இன்று காமராசரை நான் ஆதரித்து வருகின்றேன். அதன் பயனாகவே, காங்கிரசையும் ஆதரித்தவனாக ஆகின்றேன்.

## எனது கொள்கை

தோழர்களே! நமக்குத் திருப்தியான காரியங்களைச் செய்தவர்களை, நாம் பாராட்டி, ஆதரிக்க வேண்டும். அப்பேதுதான் அவர்கள் செய்கின்ற காரியத்தில், ஊக்கமும், சலிப்பின்மையும், கொண்டு செய்வார்கள்.

நான், என் கருத்துக்கு, எது சரி என்று பட்டதோ, அதனைத் துணிந்து சொல்லுபவன். அப்படிச் சொல்ல, என்னால்தான் முடியும். முடியும் என்றால், என்னால்தான் சொல்லிவிட்டுத் தப்பவும் முடியும்.

## எவரிடமும் எதையும் எதிர்பாராதவன்

ஏன் என்னால், இது முடிகிறது என்றால், எப்போதும் நான் எதற்குமே பொதுமக்களுடைய தயவையோ, ஓட்டையோ, எதிர்பார்ப்பவன் அல்ல. எனவே, இப்படி யாரிடமும், எதையும் எதிர்பார்க்காததனால்தான், எனக்குச் சரி என்று, பட்டதைச் சொல்லுவதற்கு முடிகின்றது. என்னை எதிர்க்க நினைப்பவர்களும், அவன் என்ன மொட்டை மரம்; அவனை நாம் என்ன பண்ணுவது, என்று விட்டு விட்டு, என்னைச் சரிபண்ணத்தான் முற்படுவார்கள்.

## எனது பொது வாழ்வு

மேலும், இன்றையப் பொது வாழ்வில், மற்றவர்களைவிட, நான்தான் அனுபவத்தில் முதிர்ந்தவன்; மூத்தவன். எனக்குச் சமமான வரிசையில் பொது வாழ்வில், நண்பர் இராசாசி அவர்களைத்தான், சொல்லலாம். நாங்கள் இருவரும், ஒரே காலத்தில் காங்கிரசில் ஈடுபட்டோம். அப்போது எனக்கு வயது 41. அதற்கு முன்னும்கூட, பொதுக் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறேன். இத்தகைய அனுபவங்களினால்தான், நான் யாராலும் மறுக்க முடியாத கருத்துக்களையும், யாராலும் எளிதில் ஏற்கமுடியாத கருத்துக்களையுமேதான், எடுத்துச் சொல்லுவேன்; சொன்னதிலும் யாராலும் மறுக்கவோ, தவறு காணவோ முடியாததாகத்தான் இருக்கும்படியே பார்த்துக்கொள்வேன்.

## பொறாமைக்காரர் பேச்சை நம்பாதீர்

நான், காமராசரைப் பாராட்டுவது கண்டு ஏதோ பொறாமைக்காரர்கள்தான், ஏதாவது பேசிக்

கொண்டு திரிவார்களே தவிர, காமராசரை ஆதரிப்ப தில் என்ன தப்பு? இதனால் நான் எந்தக் கொள்கை யில் இருந்து மாறிவிட்டேன் என்று, எள்ளளவும், யாரும், கூறிவிட முடியாது.

அடுத்து, எனக்கு என்ன உள் கருத்து, சுயநலம் இருக்க முடியும்? சொல்லுங்கள் பார்க்கலாம். பதவி வேண்டுமா? அல்லது பணம் சம்பாதிக்கத்தான் வேண்டுமா? என்னிடம், என் கழகத்திடம், இருக்கும் பணத்திற்கே எனக்குப் பிறகு, எவனும் போட்டி போடாமல் இருக்க, என்ன வகை செய்வது என்ற கவலை உள்ளவனாகவும், அதன் காரணமாகவே மனநோய் உடையவனாகவும், இருக்கின்றேன். அப் படித்தான் பணம் சம்பாதிக்க வேண்டுமென்றால், முடியாதா? நான்தான் பெரிய வியாபாரியாக இருந்து அதை எல்லாம் விட்டு, இப்படித் துறவிபோல் பொதுத் தொண்டுக்கு வந்தவனாயிற்றே?

## பணத்துக்குச் சிறப்பேது?

முன்போல, இன்றுதான், பணத்துக்குத்தான், என்ன மரியாதை இருக்கின்றது? அந்தக் காலத்தில், 40-50 ஆண்டுகளுக்கு முன்னால், எங்களுக்கு இருந்த சொத்தெல்லாம், சுமார் 60-70 ஆயிரத்துக்குத்தான் இருக்கும் அப்போது ஊரிலேயே பெரிய பணக் காரன் நான். கடைவீதி வழியே நடந்து போனால், மற்றக் கடைக்காரன்களெல்லாம் எழுந்து மரியாதை பண்ணுவான். இன்று அப்படியா? பணக்காரன் வீதி வழியே நடந்து போனால், "அதோ போகிறவன் யார் தெரியுமா? இலட்சம் இலட்சமாகக் கொள்ளை

யடித்தவன்; திருடன் போகின்றான் பார்" என்று கூறுகின்றார்கள், முன்பெல்லாம் ஒரு லட்சம் ரூபாய் ஒருவனிடம் இருந்தால், அவனை மக்கள் இலட்சாதிபதி என்று கூறுவார்கள். அந்தப் பேர் வாங்க, அவன் இரண்டு இலட்சம் இருப்பது போலவும் காட்டிக் கொள்ளவும் ஆசைப்படுவான்! இன்று அப்படி அல்லவே,

கள்ள மார்க்கெட்டில், இலட்சம் இலட்சமாகக் கொள்ளை இலாபம் அடித்தும், பணத்தை சேர்த்துக் கொண்டு இன்கம்டாக்சு என்னும் வருமான வரிக்கு, கணக்குக் கொடுக்கப் புரட்டுச் செய்து, கணக்குக் காட்ட, பல இலட்சம் ரூபாய்களை, மறைத்து வைத்து, இல்லாதவன் போல காட்டிக் கொள்வதையும், நாம் பார்க்கின்றோமே!

## பதவிக்கு மதிப்பேது?

வேறு பதவிக்குத்தான், எனக்கு ஆசையா? எனக்கு என்ன பதவி வேண்டும்? காங்கிரசில் உள்ள 100-க்கு 90 பேர்கள், காங்கிரசில் சேர்ந்த பிறகே, பணம், பதவி, மதிப்பு புகழ் முதலியன அடைந்தவர்கள் ஆவார்கள். நான்தான் காங்கிரசிற்கு வரும் போதே, பல பதவிகளில் இருந்தவனாயிற்றே? அன்று, பெரிய பதவி ஆகிய, ஈரோடு நகரசபைத் தலைவனாக, இருந்தவன். தாலுக்கா போர்டுத் தலைவனாக, சில்லா போர்டு மெம்பராக, தேவஸ்தானப் போர்டுத் தலைவனாக, மற்றும் என்ன என்ன கவுரவமான பொதுப் பதவியோ, அவைகளில் எல்லாம் இருந்தவனாயிற்றே? அவைகளையெல்லாம் தூச்சம்

என விலக்கி விட்டல்லவா-பெரும் இலாபம்வரும் வியாபாரத்தை மூடிவிட்டல்லவா - காங்கிரசில் (பொதுத் தொண்டில்) சேர்ந்தவன்! காங்கிரசில் சேர்ந்த உடனே, தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டி செக்ரட்டரியானேன். பிறகு அது காலாவதி ஆனதும், தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவனாக எல்லாம் இருந்தவனாயிற்றே! தமிழ் நாடு காங்கிரசுச் சரித்திரத்தில் நான் தானே முதல் தமிழன்-தலைவன்! நண்பர் இராசகோபாலாச்சாரி, சீனிவாச அய்யங்கார் போன்றவர்கள் எல்லாம் "நமது தலைவர் நாயக்கர்; அவர் ஒரு இராசரிஷீ" என்று எல்லாம் என்னைப் பற்றிப் போற்றிக் கூறும்படியான நிலையில் இருந்தவனாயிற்றே. இதற்குமேல் பொது வாழ்வில் எனக்கு என்ன இனி பதவி வேண்டும்? சட்டசபைக்கோ, பார்லிமெண்டுக்கோ போகவேண்டுமென்று விரும்பினால் கிடைக்காதா? இவைகள் ஒன்றும் இன்று பெரிய பதவி அல்லவே; இவற்றினால், யாருக்கும், இருக்கின்ற மதிப்புக் குறையுமே ஒழிய, ஒன்றும் கூடுதலாக வந்துவிடாது.

## பதவிக்குப்பின் உயர்வேது?

அடுத்து, மந்திரிப் பதவிதான் என்ன? பதவியில் இருக்கும் வரையில் மந்திரி காமராசர், மந்திரிப் பதவி போன பிறகு, நாடார் காமராசர் தானே? பதவியில் இருக்கும் வரைக்கும், மந்திரி கக்கன்; மந்திரி லூர்தம்மாள்! மந்திரிப் பதவி போன பிறகு, பறையர் கக்கன், மீன்கார லூர்து அம்மாள் என்றுதானே அழைக்கப்படுவார்கள்?

மந்திரிப் பதவி போன பிறகு, எவருக்கும், எவ னும், மரியாதை பண்ணுவதில்லையே! நண்பர் இராச கோபாலாச்சாரியார் இந்தியாவில் எவரும் வகிக்காத பதவியான கவர்னர் ஜெனரலாக இருந்தவர்! கவர்ன ராக இருந்தவர்! மாகாண அரசாங்கத்தில் இரு தடவை முதல் மந்திரியாகவும், மத்திய அரசாங்கத்தில் ஒரு தடவை மந்திரியாகவும், இருந்தவர்! இன்று, இப் படிப்பட்ட பதவிகளில் இருந்தவர். என்பதற்காக அவ ருக்கு எவன் மரியாதை பண்ணுகிறான்? பண்டிதரே. அவரை வேலைக்கு உதவாத கழிக்கப்பட்ட இயந் திரம், (கண்டெம்டு மிசின்) என்று சொல்லிவிட்டார்! அவரது சொந்த மதிப்பிற்கு வேண்டுமானாலும் மரியாதை உண்டு.

## ஒருவரும் செய்யாத ஒப்பற்ற செயல்

தோழர்களே! நானும், திராவிடர் கழகத்தா ராகிய நாங்களும், மேற்கொண்டிருக்கும் காரியம், இந்தத் தமிழ் நாட்டில் மட்டும் அல்ல; அகில இந்தியா விலேயே எவரும் மேற்கொள்ளாத-செய்ய முன்வராத- காரியம் என்பதோடு, இதைச் செய்ய, இந்த 2000 ஆண்டுகளில், எவரும் முன்வரவில்லை. இப் பெரிய வேலையினைத் தோளில் போட்டுக் கொண்டு-அதா வது சாதி ஒழிய வேண்டும்-என்று பாடுபடுகிறோம்-

சரித்திர காலந் தொட்டு, இன்று வரையில், சாதி அடியோடு ஒழிய வேண்டும் என்று, இதுவரை ஒருவர் கூட முன்வரவில்லை.

## புத்தர் கூறிய உண்மைகள்

ஏதோ 2500 ஆண்டுகளுக்கு முன் புத்தர் என்ப

வர் தோன்றி, "சாதி என்பதாக ஒன்று இல்லை என்றும், மோட்சம், நரகம் என்பது எல்லாம் அறிவுக்கு ஏற்றது அல்லவென்றும், முன்னோர்கள் சொன்னார்கள்; கடவுள் சொன்னார்; அவதார புருஷர்கள் சொன்னார்கள் என்று நம்பாதே; உன் புத்திக்குச் சரியென்று எதுபடுகின்றதோ, அதன்படி நட" என்று கூறினார். அத்தகைய அறிவியக்க வாதியும், அவரது கூட்டமும் ஒழிக்கப்பட்டுவிட்டது. அதன் பிறகு, வேறு எவரும், இந்தக் காரியங்களில், ஈடுபட்டு வேலை செய்ய, முன்வரவில்லை.

ஏனெனில், பார்ப்பனர், இத்தகைய செயல்கள் தப்பான காரியம் என்று ஆக்கி, இந்நாட்டு மக்களை நம்பும்படி செய்துவிட்டனர். ஆதலால் இந்த வேலையில் ஈடுபடுபவர்கள் எவருக்கும் மரியாதை இருக்காது; தொல்லையும் அதிகரிக்கும்.

இந்த நாட்டில், சாதி ஒழியவேண்டும் என்று பாடுபடுபவர்கள், அந்த சாதிக்கு ஆதாரமான கடவுள்கள், மத சாத்திரங்கள், அவதாரங்கள், புராணங்கள், ஆகியவைகளை ஒன்றுகூட இருக்கவிடாமல், அடியோடு ஒழிக்கப் பாடுபடவேண்டும்; இவைகளை ஒழிக்க வேண்டுமானால் துணிவு வேண்டும்; எனவே எங்களைத் தவிர யாரும் சொல்ல மாட்டார்கள்.

## சாதி ஒழிய எங்களைத் தவிர வேறு நாதி யேது?

இன்று, பொது வாழ்வில் இருந்து வரும், எந்தக் கட்சிக்காரர்களாவது, "சாதி ஒழிய வேண்டும்;

அதற்கு ஆதாரமான இவைகள் ஒழியவேண்டும்" என்று, உங்களிடத்தில் வந்து சொல்லுகின்றார்களா? காந்தியார் உள்பட, எந்த மகானாவது சொன்னாரா? இவைகள் எல்லாம், ஒழிய வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, அதற்காகப் பாடுபட்டுக்கொண்டு, உங்கள் போன்றோரால் மதிக்க, மனிதத்தன்மையுடன் உயிருடன் இருப்பவன் நான்தான். சாதி பேதம் ஒழிய வேண்டுமே தவிர, சாதிகள் ஒழியக் கூடாது என்று கூறிவந்த, உலகமே போற்றிய காந்தியார் அவர்கள், கடைசிக் காலத்தில் சாதி ஒழியத் தக்க, காரியம் செய்ய முற்பட்ட ஒரு மாத காலத்திற்குள்ளாகவே, சாதி வெறியர்கள் சதி செய்து, அவரைச் சுட்டுக் கொன்றே போட்டு விட்டார்களே! எனவேதான், இந்த வேலைக்கு, எவருமே, முன் வருவதில்லை; வந்தாலும் எப்படியாவது ஒழிக்கப் பட்டு விடுவார்கள்.

எனவே, இந்தக் காரியத்தில், நாங்கள்தான், கள்ளம் கபடமில்லாமல், உள்ளும் புறமும் ஒன்றாய், கோழைத்தனமில்லாமல், இறங்கிப் பாடுபடுகின்றோம். எங்கள் காரியத்திற்கு, ஆதாரமாக, ஆதரவாக, எவை எவை, எங்கு எங்கு, காணப்படுகின்றதோ, அவை அவைகளையெல்லாம், பாராட்டுகின்றோம்; அதோடு ஆதரவு கொடுப்பவர்களுக்கு, தொல்லையோ, தோல்வியோ, வராமலும் தடுக்கவேண்டும், என்று கவலைப்பட்டு, தடுப்பு வேலையைச் செய்து வந்திருக்கிறோம்; செய்தும் வருகிறோம்.

### காங்கிரசில் நான்

தோழர்களே! மேலும் சில விஷயங்களும், இங்கு

குறிப்பிட விரும்புகின்றேன். நான், காங்கிரசில் நண்பர்கள், வரதராசுலு நாயுடு, இராசாசி ஆகியவர்களின் வேண்டுகோளால், சேர்ந்தேன். அப்போது, நான், ஈரோடு முனிசிபல் சேர்மனாக இருந்தேன். இராசாசி, சேலத்தில் சேர்மனாக இருந்தார். அப்போது எங்கள் இருவருக்கும் பழக்கம் உண்டு. அவர், ஒருநாள், எங்கள் பேச்சில், அன்று மக்களிடம் ஆதிக்கம் பெற்றிருந்த, நீதிக் கட்சியாரைப் பற்றிக் குறை கூறியும், காங்கிரசுதான் மக்களுக்குப் பாடுபட ஏற்ற ஸ்தாபனம், என்றும் கூறினார். நான், பொதுவாக நீதிக் கட்சி உணர்ச்சியுடையவனாக இருந்தபோதிலும், இராசாசி சொல்லுவது சரியென்று எனக்கு எப்படியோபட்டது. கட்சியைக் குறைகூறிப் பேசினார். எனக்கும் அவைகள் நிசம் என்றே பட்டது.

இராசாசி, "நாயக்கரே! இது என்ன பொதுத் தொண்டு! வாருங்கள்; காங்கிரசில் சேருங்கள். நாம் எல்லாம் சேர்ந்து நாட்டு மக்களுக்காகப் பாடுபடலாம்" என்றார். நான், அப்போதே, நம்மவர்களுக்கு கல்வி, உத்தியோகம், முதலியன வேண்டும், என்று எண்ணி வந்தவன். ஆனதினால், இராசாசியும், டாக்டர் வரதராசலு நாயுடு அவர்களும் "இதுதானா பெரிய காரியம்! காங்கிரசுக்கு தாராளமாக உத்தியோகம், பதவி முதலியன கொடுக்கும் செல்வாக்கு வந்தால், நாம் தானே கொடுக்கப் போகின்றோம்" என்றார்கள். நானும், 'அதுதான் சரி', என்று துணிந்தேன்.

இராசாசி அவர்கள், எனக்கு முன்னதாகச் சேர்மன் பதவியை இராசினாமாக் கொடுத்துவிட்டு,

காங்கிரசில் சேர்ந்தார். நான், அதை அடுத்துச் சில நாளில், சேர்மன் முதலிய பல பதவிகளை இராசினாமாச் செய்துவிட்டுக் காங்கிரசில் சேர்ந்தேன்.

## அரசியலில் நான்

நாங்கள் இருவரும், பதவியை இராசினாமா செய்து, இராசினாமாவுடன் அரசாங்கத்தைக் கண்டித்தும் எழுதி, அரசாங்கத்திற்கு அனுப்பிவிட்டு, அரசியல் வாழ்வில் இறங்கினோம்.

நான் இராசாசியின் யோசனையின் பேரில், ஈரோட்டைவிட்டு, சென்னைக்கே குடிபோய் விடுவது என்று முடிவு செய்தேன். ஆனால், என் மனைவி நாகம்மையார் மறுத்தார்கள். "நம் வீடு, வாசல், மாடு, எருமை, ஆள், அமைப்புகள், என்ன ஆவது? நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் போங்கள்" என்று கூறிவிட்டார்கள்.

டாக்டர் வரதராசுலு நாயுடு மனைவியும், இப்படியே கூறித்தடுத்து விட்டார்கள். நான், எதுபற்றியும் கவலைப்படாமல், "நண்பர் இராசாசியே போய்விட்டார்; நமக்குப் போக என்ன தடை?" என்றுதான் எண்ணினேன்.

நண்பர் இராசாசி அவர்கள் நான் சென்னை வருவேன் என்று, தமது வீட்டுப்பக்கமாகவே, எனக்கும் ஒரு வீடு பார்த்து வைத்திருந்தார். சென்னைக்குப்போக, வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது. உயர்ந்த ஆடைகள் உடுத்திவந்த நான், முரட்டுக் கதர் ஆடைகளை அணிய ஆரம்பித்தேன்.

## வகுப்புவாரிப் பங்கீடுகள்

அன்று, காங்கிரசுப் பதவிக்கு வந்தால், 50 சதத்திற்கு குறையாமல் பார்ப்பனரல்லாதாருக்கும், பாக்கியை இதரர்களுக்கும், பங்கு போட்டுக் கொள்வது, என்ற அறிக்கை காங்கிரசில் இருந்தது; காங்கிரசிலிருந்து வெளியிடப்பட்டது.

## சென்னை மாகாணச் சங்கம்

அன்று காங்கிரசுக்கு எதிராக, ஆட்சிப் பொறுப்பில் இருந்த, பார்ப்பனரல்லாதாருக்குப் பாடுபட்டு வந்த, நீதிக் கட்சியினை முறியடிக்கவே, காங்கிரசிலும் பார்ப்பனரல்லாதாருக்குப் பாடுபடும் ஸ்தாபனம் உண்டுஎன்று காட்ட "மெட்ராசுப் பிரசிடன்சி அசோசியேசன்" (சென்னை மாகாணச் சங்கம்) என்பதாக ஒன்று ஏற்படுத்தினோம்.

அதற்குத் தலைவர் குத்திப்பட்டு கேசவப் பிள்ளை, நான், சல்லா குருசாமி செட்டி, லார்டு கோவிந்ததாஸ், நாகை பக்கிரிசாமி பிள்ளை, டி. வி. கல்யாணசுந்தரம் ஆகியவர்கள், வைஸ்பிரசிடெண்டுகள்; நண்பர் வரதராசுலு நாயுடு செக்ரட்டரி. இதிலும் பார்ப்பனரல்லாதாருக்கு 100க்கு 50க்கு குறையாமல், ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இது கண்டு, உள்ளுக்குள்ளாகவே, விரோதம் வளர ஆரம்பித்தது. மாதவராவ், சத்தியமூர்த்தி போன்றவர்களுக்கு இந்தச் சங்கம் வேதனையாக இருந்தது.

**தேசியச் சங்கம்**

இதனை ஒழிக்கவே அவர்கள், பிறகு நேசனலிஸ்டு அசோசியேசன், என்பதாக ஒரு ஸ்தாபனத்தை, ஏற்படுத்தினார்கள். இதற்குத், தலைவராக, விசயராகவாச்சாரியார் அவர்களும், இராசாசியும் இருந்தார்கள். தமிழ்நாட்டிற்கு நானும், ஆந்திராவுக்கு பிரகாசம், மலையாளத்துக்கு கே. பி. கேசவமேனன், ஆகியோர் செக்ரட்டரிகளாகவும் இருந்தோம். இந்தச் சங்கத்திலேயும், 100-க்கு 50-க்கு குறையாமல், பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம், பதவிகள் பங்கிட்டுக் கொடுப்பது என்று தீர்மானம் போடப்பட்டது.

நாங்கள் எல்லாம், காங்கிரசில் மனப்பூர்வமாக உள்ளும் புறமும் ஒத்துப் பாடுபட்டோம். அந்தக் காலத்தில், ஆட்சிப் பொறுப்பில் இருந்த நீதிக் கட்சியை, ஒழிக்கத்தான் இவையெல்லாம் பயன்பட்டனவே தவிர, மற்றும் (காங்கிரசுக் காரர்களுக்குப் பேச மேடையே ஏற்படாதவாறு நீதிக் க'ட்சியார் செய்துவிட்டதை மாற்றி, பார்ப்பனர்களும் மேடை சம்பாதித்துக் கொள்ளத்தான் முடிந்ததே தவிர- இவர்கள் அறிக்கைப்படி, தீர்மானப்படி, ஒரு காரியமும் நடத்தவில்லை. நான் காங்கிரசில் சேர்ந்தது, இப்படிப்பட்ட காரியங்களுக்குத் தவிர, வேறு ஒரு காரியத்திற்கும் பயன்படவில்லை. மற்றும், நான் காங்கிரசில் போய்ச் சேர்ந்த காலத்தில், நானும் வரதராசுலு நாயுடுவும், திரு. வி. க-வும் மேடைகளில் பேசிய பிறகுதான், இராசாசி, டாக்டர் ராசன், சீனுவாசய்யங்கார், சத்தியமூர்த்தி போன்றவர்கள் எல்லோருங்

கூடப் பேச முடியும். எங்களைத்தான், முதலில் பேசிக் கூட்டத்தை அமைதிபடுத்தச் சொல்லுவார்கள்.)

நான், காங்கிரசில் சேர்ந்ததும், தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டி செக்ரட்டரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அடுத்த ஒரு ஆண்டுக்குள், தலைவர் தேர்வு வந்தது. அதிலும், தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான், இப்போது இரயிலில் மூன்றாவது வகுப்பில் போவது போலவே, அப்போதும் 3-ஆம் வகுப்பில்தான் போனேன். (மற்ற நண்பர்கள், 2-ஆம் வகுப்பில்தான் பிரயாணம் செய்வார்கள். இவர்களை, ஊர் ஊராகக் கூட்டிக்கொண்டு போய், வீரமாகப் பிரச்சாரம் செய்தேன். இரண்டரை ஆண்டில், செல்வாக்குப் பெற்றிருந்த நீதிக் கட்சிக்கு மேடையே இல்லாமல் செய்துவிட்டோம்; அவ்வளவுதூரம் பாடுபட்டோம். சீனுவாச அய்யங்கார் அவர்கள், 'நமக்குப் பேச மேடை இல்லாது தொல்லைப்பட்ட நாம், இன்று, இரண்டரை ஆண்டில், நீதிக் கட்சிக்கே மேடை இல்லாமல் அல்லவா செய்துவிட்டோம்', என்று கூறி, பெருமையுடன் காங்கிரசு வளர்ந்த நிலைபற்றிக் கணக்குப் போடுவார்.)

பிறகு, எப்படியோ சிறு தகராறுகள் எல்லாம் வளர ஆரம்பித்து விட்டன. காங்கிரசுக்காரர்கள், தேச பக்தர், வ. வே. சு. அய்யர் என்று பிரமாதமாகப் புகழ்கின்றார்களே! இவருக்கு, காந்தியும்,

இராசாசியும், பிடிக்காது. இவரை, இராசாசிக்குப் பிடிக்கவே பிடிக்காது. இராசாசிக்குப் பிடிக்காத காரணத்தால், எனக்கும் அவரை பிடிக்காது.

## தேசிய வீரர்க்கான குருகுலம்

வ. வே. சு. அய்யர் அவர்கள், "காங்கிரசு இப்படியே இருந்தால் மட்டும் போதுமா? தேசீய வீரர்களை உருவாக்க வேண்டாமா?" என்று கூறி, சேரமாதேவி என்கின்ற இடத்தில், "பாரத் வாஜா குருகுலம்" என்ற பேரில், ஒரு குருகுலம், ஏற்பாடு செய்ய முயன்றார். இதற்குக் காங்கிரசுக் கமிட்டியின், நிதி உதவி ரூ. 20,000 கேட்டார். இராசகோபாலாச்சாரியாரும், நானும் கலந்து பேசி, ரூ 10,000 தான் தருவதாக, முடிவு செய்தோம், முன்பணமாக, அப்போதே ரூ. 5000 பெற்றுக்கொண்டும் போய்விட்டார்.

## தேசியப் பள்ளியிலேயே வகுப்புவெறி

இப்படி, தேசீய வீரர்களை உற்பத்தி பண்ணுவதாக ஏற்பட்ட ஸ்தாபனத்தில், சாதி வேறுபாடுகள் எற்படுத்தப்பட்டன. நம் பிள்ளைகளுக்கு ஒரு மாதிரி, பார்ப்பனப் பிள்ளைகளுக்கு ஒரு மாதிரி என்று நடத்தினார். அந்தப் பள்ளியிலேயே, முன்பு முதன் மந்திரியாக இருந்த நண்பர், ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களது மகனும், படித்து வந்தான். அவன், கொஞ்சம் துடுக்கான பையன்; அதனாலேயே, அவனை, அங்கு கொண்டு போய், போட்டார்.

அவன் வந்து இராமசாமி ரெட்டியாரிடம், "அங்குப் பார்ப்பாரப் பிள்ளைகளுக்கு எல்லாம் இட்டிலி,

உப்புமா கொடுக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் பழைய சோறுதான் போடுகிறார்கள். அவன்களுக்கு எல்லாம், உள்ளே வைத்து சாப்பாடு; எங்களுக்கு, வெளியிலே. அவன்களுக்கெல்லாம், வாழையிலையில் சாப்பாடு; எங்களுக்கெல்லாம், அலுமினியத் தட்டில் சாப்பாடு போடுகின்றார்கள். அவன்களுக்குச் சமஸ்கிருத பாட்டும், எங்களுக்கு எல்லாம், தேவார திருவாசகமும்தான் சொல்லித் தருகின்றார்கள்'', என்று சொன்னான்.

அவர் உடனே, அவனை, என்னிடம் கூட்டிக் கொண்டு வந்து, 'என்ன நடந்தது என்று தாத்தாவிடம் சொல்லுடா' என்றார். அந்தச் சிறு பையன், மளமளவென்று, என்னிடம் எல்லாவற்றையும் ஒப்புவித்தான். நான், அவனை, பக்கத்தில் இருந்த நண்பர் இராசாசியிடம், கூறும்படி சொன்னேன். அவனும், அப்படியே சொன்னான்.

இராசாசி, மிகவும் கோபப்பட்டு, வ. வே. சு. அய்யரைக் கூப்பிட்டு, 'அய்யர்வாள், இந்தப் பையன் என்ன சொல்லுகின்றான் கேளுங்கள்' என்றார். பையன், கடகடவென்று, அவர் முன்பும் ஒப்புவித்தான். ஆச்சாரியார், அவரை மிகவும் கண்டித்தார். அதற்கு, வ. வே. சு. அய்யர், ''நான் ஏதோ தெரியாமல், அந்த இடத்தில் போய், ஆரம்பித்து விட்டேன். அது மிகவும், வைதீகர்கள் நிறைந்த இடம்; அதனாலேயே, நான், சமைத்த பண்டங்களைச் சாப்பிடுவது இல்லை. பச்சைக் காய்கறிகள், தேன், இளநீர்,

கிழங்கு ஆகியவைகளைச் சாப்பிட்டுக்கொண்டு வருகின்றேன். இனி அப்படி நடக்காதபடி பார்க்கிறேன். ஆனால், கொஞ்சம் நாளாகும்" என்றார்.

முன்பு, 10000 ரூ. தருவதாக வாக்களித்ததில் நாம் வாங்கிப் போனது 5000 போகப் பாக்கி 5000-த்தையும், கொடுக்கும்படி கேட்டார். நான், "அய்யர்வாள் அவர்களே! இப்படி எல்லாம் வேறுபாடு நடக்கின்றதே, அதைச் சரிப்படுத்திப் போட்டுவிட்டு வாருங்கள், தருகின்றேன்," என்றேன்.

அதற்கு அவர் கோபப்பட்டு, "நாயக்கரே! இது தான் தேசியமா?" என்றார். நானும் கோபமாக "எங்கள் பிள்ளைகளை இப்படி வேறு விதமாக நடத்துவதுதான் தேசியமா?" என்று கோபித்துக்கொண்டேன். உடனே அவர் போய்விட்டார். போனவர் எனக்குக் கீழே வேலை பார்த்த உதவியாளரிடம் செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடச் செய்து பணம் கொடுக்க நான் அதிகாரம் கொடுத்திருந்த ஆசாமியிடம், எப்படியோ பணத்தைப் பெற்றுக் கொண்டு போய்விட்டார். இது, எனக்கு, அப்போது தெரியாது. அடுத்த கமிட்டி மீட்டிங்கில், தெரிந்து மிகவும் கோபித்துக்கொண்டேன். இராசாசி அவர்கள், என்னைச் சமாதானப் படுத்திவிட்டு, அவரையே கோபித்துக்கொண்டார்.

## குருகுல எதிர்ப்புப் போராட்டம்

நண்பர் வரதராசுலு நாயுடு அவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திககொண்டு, 'குருகுலப் போராட்டம்' என்று ஒன்றைத் தொடங்கிவிட்டார்.

இதனால் ஆச்சாரியாருக்கும், நாயுடுவுக்குமே, கொஞ்சம் தகராறு வர ஆரம்பித்துவிட்டது. அவரையும், போகிற இடங்களிலெல்லாம், வெளுத்து வாங்க ஆரம்பித்துவிட்டார்.

அதற்குள் வரதராசுலு, நாயுடுவை தலைவராக்கி, நான் செக்ரட்டரியாக இருந்தேன், வரதராசுலு நாயுடுவை, வகுப்புவாதி என்று கூறி, அவரை விலக்க, இராசாசி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தார். நான், வரதராசுலு நாயுடுவுக்கு, ஆதரவாக இருந்தேன்; வேலை செய்தேன். )

## பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் போர்

கமிட்டியிலிருந்த பார்ப்பனர் அல்லாதார்கள் எல்லாம், வரதராசுலு நாயுடுவுக்கு ஓட்டு அளித்தார்கள். இதில், தமிழர் பாதி, பார்ப்பனர் பாதி, என்று இரண்டு பகுதியாகப் பிரிந்தே போயிற்று. உடனே, வரதராசுலு நாயுடு பேரில் நம்பிக்கைத் தீர்மானம் பாசாயிற்று; அவரே வெற்றி பெற்றார். உடனே, இராசாசி முதல் மற்றப் பார்ப்பனத் தலைவர்கள் எல்லாம், இராசினாமாக் கொடுத்துவிட்டு, விலகிவிட்டார்கள். பிறகு, எப்படியோ, ஒவ்வொருவராக வந்து, புகுந்து கொண்டு விட்டார்கள். இந்த இரண்டாகப் பிரிந்ததின் காரணமாக, மாறுபட்ட உணர்ச்சி வலுத்துவிட்டது. அதற்குமேல், தாக்குப் பிடிக்க முடியவில்லை. )

## வைக்கம் போராட்டம்

இதற்க்குள், வைக்கத்தின் வீதியில், ஈழவர்கள், தீயர்கள் நடக்க உரிமை வேண்டி, நடைபெற்ற சத்

தியாகிரகத்தில், முக்கியமான தலைவர்கள் ஆன ஜார்ஜ் ஜோசப், கேசவமேனன், டி. கே. மாதவன், ஆகியோரெல்லாம் சிறைப்படுத்தப்பட்டு விட்டனர். சத்தியாக்கிரகத்தை முன்னின்று நடத்தக் கூடிய தலைவர் இல்லாததினால், அது தோற்றுவிடக் கூடிய நிலையினை அடையும் தருவாயில் இருந்தது. அந்த நிலையில், ஜார்ஜ் ஜோசப் அவர்கள், சிறையிலிருந்து இரகசியமாக எனக்குக் கடிதம் எழுதி, 'சத்தியாக்கிரகம் தோற்றுவிடக்கூடிய நிலையில் உள்ளது; எனவே, நீங்கள் எப்படியாவது வந்து, சத்தியாக்கிரகத்தை முன்னின்று, தொடர்ந்து நடத்தவேண்டும்; என்று கேட்டிருந்தார். நானும் கடிதம் கண்டவுடனேயே, விழுந்தடித்துக் கொண்டு, வைக்கத்துக்குப் போனேன்.

அங்குச் சத்தியாக்கிரகத்திற்குப் புது முறுக்கு ஏற்பட்டது. எங்குக் கூட்டம் போட்டாலும், மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு கேட்டதோடு, ஆதரவும் கொடுத்தார்கள். அந்த நிலையில், சாதியைப் பற்றிக் கண்டித்துப் பேசுகையில், அதற்குக் காரணமான கடவுள், மதம், சாத்திரங்கள்—இவைகளை ஒழிக்க வேண்டிய அவசியம் பற்றித் தாக்கிப் பேசவேண்டியவனுமாகி விட்டேன். இது, அவர்களுக்கு மிகவும் வேதனையும்; ஆத்திரமாகவும் இருந்தது. ஆனாலும், என்னைத் தட்டிக்கேட்க அவர்களுக்குத் தைரியம் இல்லை,

## பதவிநலனை விழைந்த பார்ப்பனர்

காங்கிரசுக்குச் செல்வாக்கு வர ஆரம்பித்ததும், சட்டசபைக்கு நிற்கவேண்டும், தேர்தலில் ஈடுபட்ட

வேண்டும்; என்ற எண்ணம் பார்ப்பனர்களிடம் உண்டாயிற்று. சட்டசபைக்கு நிற்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை 'சட்டசபைக்குப் போனால் தானே ஏதாவது செய்யமுடியும்? காந்தியாரே ஒத்துக் கொண்டு விட்டார்' என்றார்கள். நான், எனக்கு விருப்பமில்லா விட்டாலுங் கூட, "சரி, அப்படியானால் பார்ப்பனரல்லாதாருக்கும், சட்டசபைக்கு 50 சதவீதம் ஒதுக்க வேண்டும், என்று தீர்மானம் போட வேண்டும்" என்று திருத்தம் கூறினேன்.

## காஞ்சியில் பார்ப்பனர் வஞ்சம் காங்கிரசை ஒழிக்க வஞ்சினம்

காஞ்சிபுரம் மாநாட்டில், தீர்மானம் கொண்டு போனேன். இந்தத் தீர்மானத்திற்கு, ஆதரவு இருக்கின்றதா, இல்லையா; என்பதைக்கூடப் பார்க்காமல், ஓட்டுக்கு விடாமல், மாநாட்டுத் தலைவர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, 'இதுவகுப்பு வாதத்தைத் தூண்டுவது; இது தேசியத்துக்கு விரோதம்' என்று கூறி, 'டிஸ் அலவ்' பண்ணித் தள்ளிவிட்டார். "விசயாலோசனைக் கமிட்டியில், பொது மாநாட்டிற்கு வேண்டுமானால், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள்", என்று கூறினீர்களே. இப்போ, என் தீர்மானத்திற்கு, மக்கள் ஆதரவு இருக்கின்றதா, இல்லையா என்பதைக்கூட, ஓட்டுக்குவிட்டுப் பார்க்காமல், தள்ளிவிட்டீர்களே.

இதுதானா யோக்கிதை'' என்றேன். அவர், "நான் என்ன பண்ணுவது. அப்போ அப்படிச் சொன்னேன், இப்போ நிலைமை இப்படி" என்றார். "அப்போது, சொந்தப் புத்தியில் பேசினீர்கள் இப்போது, இரவல் புத்தியினால் என் தீர்மானத்தை இப்படித் தள்ளிவிட்டீர்கள்," என்று கூறிவிட்டு, "இந்தக் காங்கிரசை ஒழித்தே கட்டுகின்றேன்; இதுவே என் வேலை,'' என்று கூறிவிட்டு வெளி வந்தேன்.

இராசாசி அவர்களோ, "நாயக்கரே! கொஞ்சம், யோசனை பண்ணுங்கள். இப்படி எல்லாம், காங்கிரசை ஒழிக்க உங்களால் முடியாது. அது தேசீய ஸ்தாபனம்; புனிதமானது, வீணே, ஏன் கல்லில் முட்டிக் கொள்ளுகிறீர்கள். கொஞ்சம், யோசனை பண்ணுங்கள்'' என்று கூறிக் கிண்டல் பண்ணினார்.

நானோ, "ஒழிக்கிறேனோ, இல்லையோ என்பதைப் பாருங்கள் தெரியும்'' என்று கூறி வெளியே வந்தேன், வந்ததில் இருந்து, சாதிக்குக் காரணமாக கடவுள், மதம், சாத்திரங்களைத்தாக்கிப்பேசி, ஒழிக்கும் வேலையில்தான், ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றேன்.காங்கிரசிலிருந்து வெளி வந்ததும், "குடியரசு" என்ற பத்திரிக்கையைத் தொடங்கி, எனது கருத்துக்களைஎல்லாம், எழுதிக்கொண்டுவரலானேன். அன்று, குடியரசுக்கு பல ஆண்டுகள் வரையிலும், நமது திரு. முனகால பட்டாபிராம அய்யா அவர்கள், கட்டுரை எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

## (காலம் மாறியது, காங்கிரசிற்கு ஆதரவு

அந்த நிலைமை, இன்று எப்படி ஆகிவிட்டது தெரியுமா? 'காங்கிரசை ஒழிக்கிறேன். அதுதான் எனது வேலை இனி' என்று, நான், கூறிவிட்டு வெளி வந்தபோது, "நாயக்கரே! ஏன் வீண் வேலை? உன்னால் ஒருக்காலும் காங்கிரசை ஒழிக்க முடியாது அது தேசிய ஸ்தாபனம்; புனித ஸ்தாபனம்," என்று கூறி, என்னைப் பார்த்துக் கிண்டலும், கேலியும் செய்த இராசாசி அவர்கள், இன்று, "நான் காங்கிரசை ஒழித்தே தீருவேன்; காங்கிரசு தேசிய விரோத ஸ்தாபனம். அதை ஒழித்தேயாக வேண்டும்" என்று கூறித் தனிக்கட்சி வைத்துக்கொண்டு, ஓடி ஓடிப் பாடுபடுகின்றார்)

'காங்கிரசை ஒழிக்கின்றேன்' என்று கூறி, வெளிவந்த நான், இன்று காங்கிரசுக்கு முட்டுக் கொடுத்து, அதை ஒழித்து விடாமல், காக்கவேண்டிய நிலையில், இன்று நான் இருக்கிறேன்.

## கழகம் கேட்டதைக் காங்கிரசு செய்கிறது

காங்கிரசானது, நம் மக்களின் நலனில் அக்கறை செலுத்தி, நம் மக்களுக்கு இன்ன இன்ன செய்யத் தவறிவிட்டது, என்று குறை கூறிக்கொண்டு, வெளி வந்து, நம் மக்களுக்கு சமுதாயத் துறையில் இருந்த குறைபாடுகளைப் போக்கவும், கல்வி, உத்தியோகம், பதவி ஆகியவற்றில் என்ன என்ன வேண்டும் என்று பிரச்சாரம் செய்தோமோ, அவைகளை-அப்படி திராவிடர் கழகத்துக்காரர்கள் கேட்டதும்-சரிதான் என்று

உணர்ந்தோ, அல்லது நாட்டு நலனுக்கு அவசியம் என்றோ, ஏதோ ஒரு அளவுக்காவது, இன்றைய நம்நாட்டுக் காங்கிரசு ஆட்சி செய்ய முன் வந்திருக்கின்றது.

## கல்விக்கு வாய்ப்பளித்த காமராசர் ஆட்சி

இப்படி, கல்வியறிவில் பிற்பட்ட நிலையில் இருந்து வந்த நமது மக்களுக்கு, காமராசர் ஆட்சியில், தாராளமாகக் கல்வி, உத்தியோகம், அரசியலில் பதவிகள், முதலியன கிடைக்க ஆரம்பித்ததும், இதுவரை ஏக போகமாக அனுபவித்துக் கொண்டு வந்தவர்களுக்கு, இதனால் தங்களுக்குக் குறைவது கண்ட ஆத்திரமே, இன்று காங்கிரசு தேசிய விரோத ஸ்தாபனம் என்றும், ஒழித்தாக வேண்டும் என்றும், கூப்பாடு போடுகின்றார்கள், என்று எடுத்துரைத்தார்கள்.

## நீதிக் கட்சியாட்சியை விஞ்சிய மாட்சி

மேலும் பேசுகையில், காமராசர் ஆட்சியில், தமிழ் மக்கள் நீதிக்கட்சி மந்திரி சபையில்கூட அடைய முடியாத அளவு நன்மைகள் அடைந்து வருவது பற்றியும், காமராசர் அவர்கள் கல்வி அளிப்பது மூலம், சாதியினை ஒழிக்க முடியும், என்று நம்பிக்கை கொண்டு, பாடுபடும் முறைகள் பற்றியும், தெளிவு படுத்தி, அறிவுரை யாற்றினார்கள்.

கூட்டத்திற்கு, சோழவந்தான் சுற்றுவட்டாரங்களின் பல பகுதிகளிலிருந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள், வந்திருந்து, தந்தை பெரியார் அவர்களின் அறிவுரையினைக் கேட்டனர்.

---

# 2-1-61 "மெயில்" தலையங்கம்

திராவிடர் கழகத்தின் தலைவரான, எண்பது வயதிற்கு மேற்பட்ட, திரு. இராமசாமி நாயக்கரின் நகைப்புக்குரிய வேடிக்கைகள் ஆபத்துக்குள்ளாகாத வைகளாக இருக்குமானால், நல்ல கேளிக்கையாகவே இருக்கும். இந்த முதிர்ந்த வயதில், நீதி மன்றத்தின் முன்பு, இத்தனை தடவைகள் நிறுத்தப்பட்ட பிறகும், இவர் வக்கீல் தொழிலைக் கண்டிப்பாரேயானால், அது அவரது மனச்சான்றைப் பொறுத்த சங்கதியாகும்; வழக்கறிஞர்கள் தங்கள் மனச்சான்றை விற்றிருப்பார்களேயானால், அதற்குரிய பணமானது, ஆலோசனைகள் உருவத்தில், பெரியாரைப் போன்ற கட்சிக்காரர்களிடமிருந்துதான் கிடைத்திருக்கமுடியும்.

மதுரையில் பேசியுள்ள நாயக்கர், இந்நாட்டின் நீதித்துறையின் மீது தேவையற்ற தாக்குதலைச் செலுத்தியிருப்பதுதான் வெறுப்புக்கு உரியதாயிருக்கிறது, உதாரணமாக, வழக்கறிஞர்கள் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் காரணத்தால், நீதி மன்றங்களிலிருந்து பொது மக்கள் நீதியை எதிர்பார்க்கக் கூடாது, என்று பேசியிருக்கிறார். திரு. நாயக்கர் மீது குற்றஞ் சாட்டப்பட்டபோதெல்லாம், அவரைச் சில சமயம் வெறும் எச்சரிக்கையுடனோ, அல்லது மிகக் குறைந்த தண்டனையுடனோ, தாராள மனதுடன் விட்டுவிட்ட நீதிபதிகளுக்கு, திரு. நாயக்கரின் இந்தப் பேச்சு பொருத்தமான பதிலாகும், என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல, அற்பச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டாலுங்கூட, சென்னை அரசாங்கம் அவரை ஆஸ்பத்திரியில் வைத்து, நல்ல வசதிகள் செய்து கொடுத்து விடுகிறது. இதனால் புது வலுவுடன் மீண்டும் வசைபாடத் தொடங்கி விடுகிறார்.

சட்டத்துறையில், திரு. நாயக்கர் அறிவுரை கூறுவதுடன் நிறுத்திக் கொள்வாரேயானால், அவர் சொல்வதும், செய்வதும், அறியாமையின் விளைவு என்று கருதி, அவர், தொந்தரவில்லாத வெகுளி என்று விட்டு விடலாம்.

ஆனால், பொதுவான செல்வாக்கு என்ற போட்டியில், அவருடைய கொள்கைகளை, இறுதியாக்கும் வகையில் கொண்டு செலுத்தக் கூடிய துணிவில்லாத இவர், தமிழ்நாட்டில் மீண்டும், வகுப்பு வெறுப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார். தாமும், திராவிடர் கழகமும் திரு. காமராசர் அரசாங்கமும் (காங்கிரசு அரசாங்கம் என்று கூற மறுக்கிறார்) ஒன்று என்று கருதும்படி முயல்வது மூலம், இவர் அக்கறையைக் காட்டி வருகிறார்.

திரு. காமராசர் பதவியில் நீடித்திருந்தால்தான் பார்ப்பனரல்லாத தமிழர்களுக்கெல்லாம், 'கழுவாய்' கிடைக்கும் என்று, திரு. நாயக்கர் கூறி வருவது, காமராசருக்குச் சங்கடமாக இருக்கிறதா? காமராசர் மந்திரி சபையைப் பார்ப்பனரல்லாதார் நலன்களோடு, ஏன் திருநாயக்கர் ஒப்பிட்டும், சமப்படுத்தியும் எப்போதும் பேசிவருகிறார்? காமராசர் (காங்கிரசு அல்ல)

அரசின்கீழ், "சென்னையிலுள்ள பார்ப்பனரல்லாத சமூகங்கள் அரசியலிலும், நிர்வாகத்திலும். பொருளாதாரத் துறையிலும், உரிமை பெற்றிருக்கின்றன, என்றும், "முன்பு பறிகொடுக்கப்பட்டுள்ள உயர் பதவிகளில் பலவற்றையும் பெற்றிருக்கின்றனர்," என்றும், திரு. நாயக்கர் புகழ்ந்து கூறும்போதெல்லாம், திரு. காமராசர், பெருமைப்பட்டுக்கொள்கிறாரா? பார்ப்பனரல்லாதாரின் "முழுமனதான ஆதரவை மட்டும்" பெற்றால் போதும், என்று கருதுகிறாரா?

வரப்போகும் பொதுத் தேர்தல் காரணமாக, மேற்கண்ட கேள்விகள் முக்கியமானவைகளாகும். திரு. அண்ணாத்துரை, ஒரு கூட்டத்தில் கூறியது போல்—மதுரையிலும் கூறியிருக்கிறார்—1962 தேர்தலுக்காக, திராவிட முன்னேற்றக்கழகம், சுதந்திராக் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, ஆகியவைகளுக்கிடையே, ஒரு தேர்தல் ஒப்பந்தம், ஏற்படக்கூடுமேயானால், காங்கிரசுக் கட்சியானது, தனது சொந்த வன்மையை நம்பியிருப்பதுதான் அவசியமாகும். அதைவிட்டு, வெளிப்படையாகத் திராவிடர் கழகத்துடன் இணைந்து கொண்டோ, அல்லது, நான்தான் காமராசரை முதலமைச்சர் பதவியில் வைத்தேன்' என்று, அக்கழகத்தின் தலைவர், கூறைமீது நின்று விளம்பரப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளித்துக் கொண்டோ, காங்கிரசு, தன் ஒழுக்கத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்வதில், பயனில்லை. காமராசர் மந்திரிசபை, பதவியிலிருந்த இத்தனை

ஆண்டுகளிலும், மிக நல்ல பெயர் எடுத்திருக்கிறது. அடுத்த அய்ந்தாண்டுகளுக்கும், இன்றையக் காங்கிரசுக் கொள்கையையே, வாக்காளர்கள் ஆதரிப்பார்களென்பதில் ஐயமில்லை. ஆனால், காமராசர் புகழ் பாடித்திரிகின்ற நாயக்கரிடம், அவர் கூறிவிடவேண்டும், "சென்னையை ஆட்சி புரிவதற்குத் திராவிடர் கழகத்தின் உதவியைத் தாம் நாடவுமில்லை; தேவையுமில்லை," என்று, கழகத்தைக் கலைத்துவிட்டு, காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து, பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரென்ற எல்லாவிதமான மாநில மக்களும் சரிசமமானவர்கள் என்ற கொள்கையையும் கொண்டிருக்கின்ற, காங்கிரசுக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடப்பதாக உறுதி கூறி விட்டு, திராவிடர் கழகம் காங்கிரசில் இரண்டறக் கலந்துவிடவேண்டும், என்பதையும் திரு. காமராசர் கூறிவிட வேண்டும்.

வகுப்பு வாதமும், சாதீயமும், மொழி வெறியும் போன்ற சக்திகள், புதிய அரசியல் வேடத்தில், மீண்டும், புத்துயிர் பெற்று வருவதை எச்சரித்துக் காட்டி, காங்கிரசுக் காரியக் கமிட்டி, கூறியிருக்கும் இச் சமயத்தில், திராவிடர் கழகத்தை, காங்கிரசுக் கட்சி, வெளிப்படையாக மறுத்துக் கூறவேண்டியது அவசியமாகிறது. காமராசரையும், காங்கிரசையும், அவர்கள் விரும்பாமலே காப்பாற்றுகின்றவராகத் திரு. நாயக்கர் நடித்துக்கொண்டே, முழு சுதந்தரமான தமிழ் நாடு வேண்டுமென்று சொல்லுகிறார். இந்த ஆபத்தைத்தான், தடுக்க வேண்டுமெனக் காங்கிரசுக்

காரியக் கமிட்டி, நாட்டுக்கு எச்சரிக்கை விடுத்திருக் கிறது. பவநகர் காங்கிரசுக் கூட்டத்தில், தேசிய அய்க்கியத்தைப்பற்றி, வற்புறுத்தியிருப்பது உண் மையாயிருக்குமானால், பிரிவினை சக்திகள் எங்கே தலையெடுத்தாலும், அவைகளைக் கடுமையாக அழித் துக் கொன்றே தீரவேண்டும். இப்படியே சென்று கொண்டிருந்தால், திராவிடர் கழகத்தின் ஆதரவி னால், காங்கிரசுக்குப் பலக் குறைவு ஏற்பட்டுவிடும். தமிழ் நாட்டுக்கு, இது பெரிய தொல்லையாகி விடும். ஏனெனில், இம்மாதிரி வகுப்புவாதம், சாதி, மொழிப் பூசல்களில் இத் தலைவர்கள் முழு நம்பிக்கை கொண் டிராவிட்டாலும், இளைஞர்களின் நெஞ்சில் நஞ்சு ஊட்டப்பட்டுவிடும்.

இக் கழகத்தின் தலைவர்கலை, சென்னைக் காங்கிரசு மந்திரி சபை, நீண்டகாலமாகவே சகிப்புத் தன்மையுடன் நடத்தி வருகிறது. வெளிப்படையான வகுப்புத் துவேசத்தைப் பரப்பி வருகின்ற, இக் கட்சி யின் தேசீய விரோதமான நடவடிக்கைகளை, அர சாங்கம் நீண்டகாலம் பொறுத்துவிட்டது. இதன் பயனாக, இந்த மாநிலத்தில், காங்கிரசுக் கட்சி, திரு. நாயக்கரின் இலட்சியங்களை - கொள்கைகளை - இரக சியமாக ஆதரிப்பதாக, விருப்பு வெறுப்பற்ற, மக்கள் யாவரும், வெளிப்படையாகக் கூறி வருகின்றனர். சென்னையில், காங்கிரசு மந்திரிசபை ஆட்சி புரி கின்ற போதிலுங்கூட, இதன் செயல் முறைகளாலும் அரசாங்க உத்தியோகத்திற்கு ஆட்களை நியமிப்பதி

லும், பொறுக்குவதிலும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தாரை மட்டும் புறக்கணிப்பதாலும், திராவிடர் கழகத்தின் வகுப்புத்துவேசப் பிரச்சாரத்தையும், சாதி எதிர்ப்பையும் சகித்துக் கொண்டிருப்பதினாலும், இதன்மூலம் விளைகின்ற வெறுப்புணர்ச்சியினாலும், மீண்டும் நீதிக் கட்சிதான் இங்கு நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறதோ, என்று கருதக்கூடிய நிலைமை, ஏற்பட்டிருக்கிறது.

சோழவந்தானில், காங்கிரசுக்காரர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில், தாம் சொற்பொழிவாற்றியதாகவும், காங்கிரசுக்காரர் காங்கிரசுக் கொடிகளுடன் தம்மை ஊர்வலமாக அழைத்துச் சென்றதாகவும், திரு. நாயக்கர் பேசியிருக்கிறார்.

ஆதலால் திரு. நாயக்கர், திரு. காமராசரின் முதுகில் தட்டிக் கொடுக்கிறார். ஆகையால்தான் காங்கிரசுக் காரியக் கமிட்டியும், சாதீயம் புதிய அரசியல் வேடத்தில் தலைதூக்குவதைக் கண்டு மக்களை எச்சரித்திருக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள காங்கிரசுக் கட்சி, இந்த அறிவுரையைக் கேட்காவிட்டால், இதுவும் நாளடைவில் நீதிக் கட்சியின் முடிவைத்தான் அடைய நேரிடும்.

('மெயில்' பத்திரிகை, அண்மையில் தனது வகுப்பு வெறியைக் கொட்டி, குறும்புத்தனமாக, பெரியாரைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென, நீதிபதிகளைத் தூண்டிவிடும் வகையில், தன் வயிற்றெரிச்சலைக் கொட்டி, எழுதியுள்ள தலையங்கத்துக்குச் சரியான சவுக்கடி, கொடுத்து ஒரு பழைய நீதிக் கட்சியாளர் **"சண்டே டைம்ஸ்"** பத்திரிகையில் பதிலளித்திருப்பதை, கீழே தருகிறோம்.)

"மெயில்" பத்திரிகை, கடந்த திங்கட்கிழமை (ஜன. 2) அன்று, எழுதிய அதன் தலையங்கத்தின், நோக்கத்தைக் கொண்டே, அப்பத்திரிகை செம்மையான சவுக்கடி வாங்கத் தகுதிவாய்ந்ததென்று, நான் கருதுகிறேன்.

சென்னை மேயர் தேர்தல் பற்றி, 'மெயில்' எழுதிய மற்றோர் தலையங்கத்துக்கும், இதே தண்டனை கொடுப்பது, பொருத்தமாயிருக்கும்.

அந்த இரு தலையங்கங்களிலும், அப் பத்திரிகை விசயங்களைத் திருத்திக் கூறுவதுடன், மிக மோசமான வகுப்பு வெறி நஞ்சைப் புகுத்தியிருப்பதையும் காணலாம்.

திராவிடர் இயக்கம், 1916 டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமே, மிகவும் தந்திரமாக, சமுதாயத்துறை, மதத்துறை, மற்றும் அரசியல்துறையில் கூட, மறைந்து நின்று தாக்கி வருகின்ற, இன வகுப்பு வெறி நச்சரவை ஒழித்துக்கட்டவேயாகும்.

அரசியல் துறை, சம்பந்தப்பட்ட மட்டில், அந்த நச்சுப்பாம்பின் விசப்பறக்கள் எவ்வித விசமமும் புரியாதபடி பிடுங்கப்பட்டு விட்டன. மக்கள்தொகையில் நூற்றுக்கு மூன்று சத விகிதத்தினரே, உள்ள ஒரு சமூகம், முழு ஆதிக்கம் செலுத்திவந்தது, முறியடிக்கப் பட்டு விட்டது. எல்லாச் சமூகத்தினரும், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் சமமான பதவிவாய்ப்பும், சலுகைகளும், பெறவேண்டுமென்பதே இந்நாளில் செல்லத்தக்கதாகிவிட்டது.

## அய்க்கோர்ட் ஆதிக்கமும் அழியத் தொடங்கியது

சென்னையிலுள்ள வகுப்பு வெறியர்கள், காலஞ்சென்ற திரு. எம். டி. தேவதாசு அவர்களும், அண்மையில் காலஞ்சென்ற எம். வெங்கடசுப்பாராவ் அவர்களும், (பார்ப்பனரல்லாதார்), சென்னை அய்க்கோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது, எழுப்பிய பெரும் கூக்குரலையும், எதிர்ப்பையும், நான் இன்றும், நினைவிலிருத்திக் கொண்டிருக்கிறேன். இந்த வகுப்பு ஆதிக்கத்தினரால் ஆதரிக்கப் படுபவர்களை விட, அந்த நீதிபதிகள் எவ்வளவோ நல்ல முறையில், பணிபுரிந்து புகழ் எய்தியுள்ளனர். ஆனால், அவர்கள் பல்விதமான விசமத்தனங்களையும், புரட்டுப் பிரசாரங்களையும், பொய்யான அவதூறுகளையும், சமாளிக்க வேண்டியிருந்தது.

சென்னையிலிருந்த, வகுப்பு வெறி கொண்ட பத்திரிகைகள் இந்த புதிய நீதிபதிகளை நியமித்ததற்காக, சென்னைநீதிக்கட்சி மந்திரி சபையை எதிர்த்து

ஒரு புரட்டான இயக்கமே தொடங்கின. அய்க் கோர்ட்டின் திறமையே, அந்த நீதிபதிகளால் குன்றி விடப்போகிறது; நீதியை நிலைநாட்டுவதே குலைந்து போய்விடுமென, சோதிடம் கூறின.

நீதிக்கட்சி மந்திரிசபை, வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவ முறைப்படி மக்கள் தொகை அடிப்படையில், உத்யோக நியமனம் செய்யும் ஒவ்வொரு தடவையும், இம்மாதிரிக் கூச்சல் எழுப்பப்பட்டே வந்துள்ளது. இறுதியாக, இந்த வகுப்பு வெறியர்கள், நீதிபதிகளின் நியமனத்தை எதிர்த்தவர்கள், தங்கள் வாயாலேயே, இந்த இரு நீதிபதிகளும், முன்பு இருந்தவர்களைவிட, எவ்வளவோ திறமையுடனும், பெருமைதரும் வகையிலும், நீதியை நிலைநாட்டும் வகையில் பணிபுரிந்திருக்கிறார்கள், என்று புகழ் பாட வேண்டியதாயிற்று.

## சமூகப் பணியிலும் சிறப்பு

சென்னை நகரசபையில், அறிவிற் சிறந்த மேதைகளும், நிர்வாகச் சிங்கங்களுமாய் விளங்கிய, சர். பி. தியாகராச செட்டியார், திவான் பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியார், திவான் பகதூர் டி. வரத ராசுலு நாயுடு, சர். ஏ. ராமசாமி முதலியார், போன்றாரும், மற்றவர்களும், சென்னை மக்களுக்காக, சிறப்பான பணி புரிந்திருக்கின்றனர்.

பிற்காலத்தில், ஒரு வகுப்பு வெறிக் கந்தலாகவே ஆகிவிட்ட மெயில் பத்திரிகை, நீதிக் கட்சியின் பழைய காலப் பெருமை மிக்கப் பணிகளை, தற்போது திருத்திக் கூறி, தனது குறும்புத்தனமான பிரச்சாரத்தில்

இறங்கியுள்ளது. இந்த வகுப்பு வெறியை எதிர்த்து, இந்த இன நாயகத்தை ஒழித்துக்கட்ட, காங்கிரசிலிருந்து வெளியேறியது முதல், ஒரு புனிதப் போரே நிகழ்த்தி வரும் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களை, இகழவும் முற்பட்டுவிட்டது. பெரியார் இந்த குறுகிய மனப்பான்மை உள்ள தலைவர்கள் நிறைந்த காங்கிரசை, ஒழித்துக் கட்டுவதற்கும், சாதி, இன வெறியை, ஒழித்துக் கட்டவும், பாடுபடுகிறவரைக் குறைகூற முற்பட்டிருக்கிறது.

"தனி நாடு கோருபவர்களை, எங்கே தலைநீட்டினாலும் சிறிதும் இரக்கம் காட்டாமல் அடித்துக் கொல்ல வேண்டும்", என்று 'மெயில்' பத்திரிகை கூறுகிறது. இதையேதான், பெரியார் அவர்களும், இன்றும் தெளிவாகக் கூறுகின்றார்.

அதாவது, வகுப்பு வெறியானது, இந்த நாட்டின் சமுதாய அமைப்பையே பல கூறுகளாக்கி விட்டிருப்பதுடன், பல மேல்-கீழ் படித்தரங்களையும் ஏற்படுத்தி, ஒன்றுக்கொன்று, ஒருபோதும் ஒற்றுமையடைய முடியாதபடி செய்து வருவதால், இந்தச் சாதி முறையையே, வேருடன் களைந்தெரிய வேண்டும், என்று, பெரியார் அவர்கள், வற்புறுத்திக் கூறி வருகிறார்கள்.

## கோர்ட் அவமதிப்பாம்

'மெயில்' பத்திரிகை, வகுப்பு வெறியில் தலைக்கனத்துடன் நீதிபதிகளையே, வெகுதூரம் தாக்கும் அளவுக்கு, துணிந்து எழுதுகிறது. நீதியை நிலைநாட்ட, நீதிபதிகள், தவறிவிட்டதாகக் குற்றஞ்

சாட்டுகிறது. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு, கோர்ட்டுகளில் கடின தண்டனை கொடுக்காததால், கோர்ட்டுகளுக்கே அவமதிப்பு எற்படுகிறதாக கூறு கிறது. "திரு. நாயக்கருக்கு, (பெரியார் ஈ. வெ. ராம சாமி) நீதிபதிகள் மிகவும் தாட்சண்யப்பட்டு, மிகமிக லேசான தண்டனைகளைக் கொடுத்து, அல்லது லேசாக எச்சரித்து விடுகின்றனர்," என்று நீதிபதி களின்மேல், குற்றம் சுமத்தி அந்தப் பத்திரிகை எழுதுகிறது.

பெரியார் அவர்கள், அநேக தடவை சிறை சென்றதற்கு, ஒரு பெரும் பட்டியலே உண்டு. பல நீதிபதிகளால், பல்வேறு குற்றம் சாட்டப்பட்டதற்காக விசாரிக்கப்பட்டிருக்கிறார். பெரியாருக்கு, குறைந்த லேசான தண்டனைதான் கொடுக்கவேண்டுமென்று, எவ்வாறு பல்வேறு நீதிபதிகளும், ஒருமுகமான கருத் துப்பெற முடியும்? பெரியார்மீது குற்றஞ்சாட்டப் படுகையில், எல்லா சாட்சியங்களையும் நன்கு விசா ரித்து, அறிந்து, பெரியார் சமுதாயத்தில் உள்ள ஏற் றத்தாழ்வுகளையும், அநீதிகளையும் களைந் தெரிவ தற்கான போராட்ட வீரர் என்பதை, உண்மையை உணர்ந்து, அதற்கேற்றபடி நடுநிலை தவறாமல், நீதியை அனுசரித்து, நடந்துகொள்ளும் நீதிபதிகளின் மீதே, நியாயம் தவறி நடப்பதாகக் குற்றம் சாட்டும், இந்த 'மெயில்' பத்திரிகையின் தலையில், சரியாகக் குட்டவேண்டும் என்பதே அவசியமெனத் தோன்று கிறது.

## கொதிப்புக்குக் காரணம்

மெயில் பத்திரிகையின், இந்த வயிற்றெறிச்சலுக் குக் காரணம், பெரியாருக்கு, சோழவந்தானில் காங்

கிரசார் அளித்த, வரவேற்புத்தான். பெரியார், காங் கிரசுக்காரர்களால், காங்கிரசுக் கொடிகளுடன், ஆடம் பரமான ஊர்வலமாக, அழைத்துச் செல்லப்பட்டு, காங்கிரசுக்காரர்களால் அமைக்கப்பட்ட மேடையில், பொதுக் கூட்டத்தில் பேசச் செய்திருக்கின்றனர். காங்கிரசுமட்டு மென்ன, இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியினருமே, பெரியாரை மிகவும் கவுரவப்படுத்திப் போற்றுகிறார்கள் என்பதை, இந்த வகுப்பு வெறி பிடித்த பத்திரிகை, அறியாமலா இருக்கிறது? மெயில் பத்திரிகை, அவ்வளவு தூரம் தன் நிலை தவறிவிட்டி ருக்கிறது. "சென்னை மாநிலத்தைக் காங்கிரசு ஆள வில்லை; நீதிக்கட்சிதான் ஆளுகிறது" என்று எழு தும் அளவுக்கு, வயிற்றெறிச்சல் அடைந்து விட்டி ருக்கிறது.

உண்மையில், இது தவறான வர்ணனையே, ஏனெனில், நீதிக் கட்சியின் கொள்கைகளை, காங் கிரசு மந்திரி சபை, உண்மையில் பின்பற்றுவதாயின், நாட்டில் பொதுமக்களின் ஆதரவை முழுதும் பெற் றிருக்க வேண்டுமே?

## நடப்பது நடந்தே தீரும்

மெயில் பத்திரிகையின், இந்த ஆத்திரமிக்க விமர் சனம், வகுப்பு வெறியர்களை, பெரியாரின் பேரியக் கம், எவ்வளவு சீக்கிரம் மனங் கலங்கச் செய்கிறது என்பதையே காட்டுகிறது. இந்திக் கட்டாயத்தை எதிர்த்துப் போர் தொடுத்ததற்தாகச் சிறைப்படுத்தப்

பட்டிருந்த பெரியார் அவர்கள், சிறையில் இருக்கும் போதே, அவர் நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அவரது வலிமை மிக்க போராட் டம், வகுப்பு வெறியர்களின் அடிப்படையையே உடைத்து வருவதைக் காட்டுகிறது.

ஒட்டக அணியைக் கண்டு நாய்கள் குலைத்துக் கொண்டிருக்கலாம். ஒட்டக அணி, இதை மதிக்காது சென்றுகொண்டே இருக்கும். இதைப்போன்று, எதிரிகளின் பொறாமை, வசைமொழி, எதிர்ப்புக் கூக் குரல்களை, சட்டை செய்யாமல், பெரியாரின் பெரும் பணி, நடந்துகொண்டுதான் இருக்கும். களம், பெரியாருடையதாகிவிட்டதை அறிந்துகொள்ளட்டும்.

# மெயிலின் மிரட்டல்

(வி. ஆர். சந்திரன், பி.ஏ.)

ரஷ்யா - அமெரிக்காவை மிரட்டலாம். அமெரிக்காவும் - ரஷ்யாவை மிரட்டலாம். பாக்-ம் இந்தியாவை மிரட்டலாம். இதற்கெல்லாம் - அதனதன் படை பலம் காரணமெனலாம்.

ஆயின் மெயிலின் மிரட்டலின் அந்தரங்கமென்ன! 100-க்கு 3 பேராயுள்ள பார்ப்பனர்களின் இந்த அக்கிரகார ஏடு காமராசரையும் பெரியாரையும் எச்சரிக்கை செய்யும் அளவுக்கு - அதன் பலம்தான் என்ன? பெரியாரிடமுள்ள தொடர்பை காமராசர் அறுத்துக் கொள்ளாவிட்டால்— ஜஸ்டிஸ் கட்சி 1937 தேர்தலில் புதைக்கப்பட்டதைப் போல்—காமராசர் கட்சியும் 1962-ல் புதைக்கப்பட்டுவிடும் என்று, கூறுமளவுக்கு—இந்த ஆரிய ஏட்டுக்கு அவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது?

காரணமும் இல்லாமலில்லை. மத்தியஸ்தக் கடையில் தங்க நகை நிறுத்துப் பார்க்கும் போது ஏற்றத் தாழ்வுகளை-குண்டு மணிகள் கொண்டு-நிர்ணயம் செய்தல் போல்—பொதுத் தேர்தலில்—பார்ப்பனர்கள் தங்கள் கட்டுக் கோப்பு மூலம்—குண்டுமணி வேலை செய்து—திராவிட இனத் துரோகிகளுக்கும் விபீடணர்களுக்கும், அனுமான், சுக்ரீவன்; பிரகலாதன் களுக்கும் வெற்றி தேடித்தர முடியுமென்பது தான்—மெயில் மிரட்டலின் பிரம்ம ரகசியம்! சுதந்திரா கட்சியின் சூதும் சாணக்கியமும்கூட அதுதான்!

## பார்ப்பனர்க்கு தனித் தொகுதி

பல தேர்தல்களின் முடிவுகளைச்சற்று ஆராய்ந்து பார்த்தாலே—இப் பார்ப்பன சதிவேலை புரியாது போகாது. இப் பார்ப்பனச் சதியின் முதுகெலும்பை மடக்கென்று ஒடிக்க வேண்டுமாயின் பார்ப்பனர்களுக்கு அவர்கள் சனத்தொகைக் கேற்ப தனித் தொகுதிகள் ஏற்படுத்தி அவர்களுடைய பிறவிக் குணமான மித்திர பேதங்களை தவிர்ப்பதுதான் தக்கதோர் ராச தந்திரமாகும். இதை ஆதியில் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களான சர். தியாகராயரும், டாக்டர் நாயரும், சர். கே. வி. ரெட்டி நாயுடுவும், இங்கும் இங்கிலாந்தில் பார்லியெண்டாருக்கும் எடுத்துச் சொல்லி வாதாடினர். இல்லையேல் பார்ப்பனர் ஆதிக்கமே தொடர்ந்து அரசியலில் நீடிக்கு மென்றும் எச்சரித்தனர். இந்நாட்டு தகிடுதத்தத் தேசீயமும் 'நமக்கென்ன' என்ற பிரிட்டிஷாரின் போக்கும் ஜஸ்டிஸ் உத்தமத் தலைவர்களின் உண்மை அறிவுரைகளை உதாசீனப் படுத்தின. பார்ப்பனரின் விழிப்பும் நம் பாமர மக்களின் உறக்கமும்—இப் பார்ப்பனச் சதியென்னும் நச்சு மரத்துக்கு உரமிட்டது போன்றாகி-இப்பொழுது அசைக்க முடியாத ஆட்டங் கொடுக்காத நிலைக்கு எங்கும் பரந்து வளர ஆரம்பித்து விட்டது. இந்தப் பார்ப்பன நச்சு மரத்தின் ஆணி வேரை வெட்டி வீழ்த்தாமல் போனால் உண்மை சனநாயகம் வளராது—பாமர மக்கள் கை ஓங்காது-பார்ப்பனராட்சியே பரம்பரை பாத்தியம் கொண்

டாடித்தொடர்ந்து நிலைபெற்று பழனமபோல் பாமர மக்கள் என்றென்றும் தலை தூக்காது போய்விடும் என்பது மட்டும் இந் நாட்டு வரலாறு கூறும் உண்மை.

இதற்கெல்லாம் ஒரே மருந்து — பார்ப்பனர்களுக்குத் தனித் தொகுதிகொடுத்துவிடஏற்பாடு செய்வதுதான். ஜஸ்டிஸ் கட்சியால்கூட செய்யமுடியாத சில காரியங்களைச் செய்துள்ளதாக பெரியாராலேயே புகழ்மாலை பெற்றுள்ள காமராசர்—இத்துறையிலும் பார்ப்பனருக்குத் தனித் தொகுதி கொடுத்து—அவர்களின் மித்திரபேத விஷமங்களை நிறுத்தும் துறையிலும்—வாகை மாலை சூடுவாரா!

இன்றேல்—அரசியல் மத்தியஸ்தக்கடை ஆரியப் பார்ப்பனர் கையில்தான்—மெயில் போன்ற பார்ப்பன ஏடுகளின் மிரட்டல்தான். குலத்துரோகிகளுடன்குல்லூகப்பட்டர்கூட்டுத்தான்! 100-க்கு3பேரைக் கண்டு நெல்லிக்காய்களான 100க்கு 97 பேர் நடுங்க வேண்டியதுதான். இதைச் செய்ய—டெல்லி தர்பார் இடம் தருமா!

~

# பார்ப்பனர்கள்!

இந்நாட்டின் நல்ல ஆட்சியைக் கெடுத்தவர்கள் பார்ப்பனர்கள். வெள்ளையன் ஆட்சி உலகத்திலேயேநல்ல ஆட்சி. நல்ல ஆட்சி என்றால் உள்ள ஆட்சிகளில் சிறந்த பொறுப்புள்ள ஆட்சி; அதைக்கெடுத்து "மக்கள் ஆட்சி" என்னும் பேரால் "தன்" ஆட்சியை (பார்ப்பன ஆட்சியை) நிறுவிக் கொண்டார்கள் பார்ப்பனர்கள். இந்தப் பார்ப்பன ஆட்சி, ஒரு நல்ல ஆட்சியாக மாறவேண்டுமானால், இந்த ஆட்சியில் பார்ப்பான் ஆதிக்கத்திற்கு ஏகபோக ஆட்சிக்கு கேடு வரவேண்டும். அப்போதுதான் பார்ப்பான் இந்த ஆட்சியை ஒழிக்க முற்படுவான்.

## "கேடு வருவது" என்றால் என்ன?

சட்டசபையில், 200 மெம்பருக்கு அவன் விகிதப்படி 6க்கு மேல் ஒன்றுகூட இருக்கக்கூடாது. மந்திரிகள், நீதிபதிகள் முன்சீஃபுகள், கலெக்டர்கள், போலீசு அதிகாரிகள், எஞ்சினீயர்கள், டாக்டர்கள், முதலிய பதவிகள் பார்ப்பனர்களுக்கு, மற்றவனைக் கெடுக்க, கொள்ளை அடிக்க, தங்கள் நலத்தைப் பெருக்கிக்கொள்ள (அவர்களுக்கு) உதவும்படியான பதவிகளில், கண்டிப்பாக அவர்கள் சன எண்ணிக்கைக்குமேல் ஒன்றுகூட கிடைக்க முடியாமல் பார்த்துக்கொண்டால், இந்த நாட்டில் நல்லஆட்சி ஏற்பட்டு விடும்.

பார்ப்பான் அரசியல் என்பது எல்லாம், பார்ப்பான் ஏகபோக சர்வாதிகார ஆட்சி நடக்கவேண்டும்-தாண்டவம் ஆட வேண்டும்; மற்றவர்கள் நிலையானது, எப்படி "நடராஜன்" என்னும் (சிவன்) சிலை, அதன் காலடியில் ஒரு தமிழனை, மீசைக்காரனைப் போட்டு, அழுத்திக் கொண்டு, மற்ற காலைத் தூக்கித் தாண்டவம் ஆடுகிறாப் போல் இருக்கிறதோ, அப்படிப் போலும். அந்தச் சிவனின் மனைவி (காளி), எப்படி ஒரு தமிழன் சிலையைக் காலடியில் போட்டு அழுத்திக் கொண்டு, கழுத்தில் தமிழன் தலைகளை வெட்டி, மாலையாகப் போட்டுக் கொண்டு, ரத்தம் சொட்டச் சொட்ட, ஒரு தமிழன் தலையை வெட்டி, அவனின் தலை மயிரைக் கையில் பிடித்துத் தொங்க விட்டுக் கொண்டு, இருக்கிறாளோ அது போலவும், பார்ப்பனர்; நம்மை (தமிழனை) அவர்கள் நடத்துவது—நடத்த வேண்டும் என்பதுதான்.

இன்று, இந்தத் தமிழ் நாட்டையே எடுத்துக் கொண்டாலும், ஒரு கடைசித் தர பிச்சை எடுக்கும் பார்ப்பானுக்கோ, பார்ப்பனத்திக்கோ, வாழ்க்கையில் போக போக்கியத்தில், என்ன குறை இருக்கிறது? யாருக்குப் படிப்பில்லை? யாருக்கு வேலையில்லை? யார் உடலுழைப்பு வேலை செய்கிறான்? என்று யாராவது சொல்ல முடியுமா? எல்லா பாாப்பன மக்களும், இந்த நாட்டு நடுத்தர மக்கள் வாழ்க்கைக்கு மேலாகவே, வாழ்கிறார்கள். அப்படி இருந்தும், இந்த நாட்டு ஆட்சியை, ஒழிக்க வேண்டுமென்றால். மந்திரிகளிடம் ஏதாவது இலஞ்சம், அநீதி, அக்ரமம்,

ஒழுக்கக் கேடு, சுயநலம் இருந்து வருகிறது என்று சொல்ல முடியுமா? பதவி, உத்யோகம், கல்வி, சம்பளம், வரி, தொழில்துறை, முதலியவைகளில் எந்த சாதிக்கு ஆவது—அதாவது பார்ப்பனர்களைத் தவிர, மற்ற எந்தச் சாதிக்கு ஆவது, ஏகபோகமாய் பார்ப்பனர்க்கு உள்ள விகிதத்தைவிட, அதிகமாய் அளிக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா? பார்ப்பான், 100-க்கு 3 பேர்; தமிழர் (மற்றவர்கள்) 100-க்கு 97 பேர் இருந்தும் பார்ப்பானுக்கு—3 உள்ளவனுக்கு 60-70 வீதம் பதவிகள் உத்யோகங்கள் இருப்பதோடு, கல்வியில் தமிழருக்கு 100-க்கு 20 என்றால், பார்ப்பானுக்கு 100-க்கு 100 என்ற விகிதத்தில், கொள்ளை வாய்ப்பும், அனுபவமும், இருந்தும், மற்றவர்களுக்கு, அவர்கள் எண்ணிக்கையில் 97-க்கு 20, 30-க்குக்கூட வாய்ப்பு இல்லாமல், கொடுமைப் படுத்தப்பட்டிருந்தும் கூட, இந்த ஆட்சியை, (இன்றைய தமிழன் மந்திரி சபை ஆட்சியை)யே பார்ப்பனர்கள் ஒழித்துக் கட்டி விட்டு, "சர்வ பௌமமாய்," ஏக போகமாய், தாங்களே ஆள வேண்டும், ஆதிக்கம் செலுத்த வேண்டும், என்றால், இப்படிப்பட்ட ஆட்சியை, யார்தான், நல்ல ஆட்சி, சனநாயக (மக்கள்) ஆட்சி, என்று சொல்ல முடியும்?

இன்று, இந்நாட்டில், அரசியல் கிளர்ச்சி என்னும் பேரால், இன்றைய தமிழ் நாட்டு ஆட்சியை ஒழிக்க, கவிழ்க்கப் பார்ப்பது, பார்ப்பான் அல்லாமல் வேறு யாருமே இல்லை.

விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைய இந்நாட்டுத் தமிழன் ஆட்சிக்கு, விரோதமாக, அதை ஒழிக்கப் பாடுபடுவது, பெயரளவில் நாலு கட்சிகள்;

1. சுதந்தரா கட்சி
2. கம்யூனிஸ்ட் கட்சி
3. சோஷியலிஸ்ட் கட்சி
4. கண்ணீர்த்துளிக் (தி. மு. க.) கட்சி

முன்னையது 3-ம், எல்லா இந்தியக் கட்சி. பின்னையது ஒன்று, இந்நாட்டுக் கட்சி, முன்னையது 3-க்கும் பார்ப்பான் தலைவன். பின்னையது பார்ப்பானை எசமானும் சவரட்சினைக் கர்த்தாவாகவும் கொண்ட, தமிழன் தலைவனாக இருக்கும் கட்சியாகும்.

இவர்களுக்கு, கொள்கை—இன்றைய ஆட்சித் தலைவரான காமராசரை, எப்படியாவது, ஆட்சியில் இருந்து, அகற்றுவது இலட்சியம். பிறகு 4 பேரும் அதைப் பங்கிட்டுக் கொள்வது என்பது.

இந்த முயற்சிக்குக் காரணம், முதல் 3 கட்சிகளுக்கும் தமிழன் தலை தூக்குகிறானே, இது பார்ப்பானுக்குப் பெரும் ஆபத்தாய் முடியுமே என்பதுதான்—என்பதேதான்.

கண்ணீர்த்துளிகளுக்கு, "அரசியல்" பேரால் வாழ்வு நடத்தலாம்; பிழைக்கலாம்; அதற்கு எதையும் செய்யலாம், என்பதேயாகும். அதாவது இவர்கள், சோறும், சேலையும், கொடுத்தால், யாருக்கு வேண்டு

மானாலும், பெண்டாட்டியாய், அல்லது வைப்பாட்டியாய், இருக்கலாம் என்பதே. இந்த நாட்டின் அரசியலுக்கு, பார்ப்பான் எதிர்ப்பில்லாமல் இருந்தால், கண்ணீர்த்துளிக் கட்சிக்கு இடமே இருந்திருக்காது. அதை நம்பியே வாழ நினைப்பவர்கள்; இவர்களுக்கு வாழ்க்கையே குறிக்கோள்; ஆனதால், இவர்களை, எப்பவும் சரிப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், மற்ற மூவரும், அசல் பார்ப்பனர்கள் என்பதோடு, தமிழர்களுக்கு பிறவி—பரம்பரை எதிரிகளாவார்கள். இந்த எதிரிகளுக்கு, இன்று ஆதரவளித்து, தாங்களும் தனித்தனி எதிர்க்கட்சி போலவே தொண்டாற்றி வருகிறவர்கள், பெரிதும் பார்ப்பனரும், பார்ப்பனப் பத்திரிகைகளுமேயாகும். இந்து, மெயில், எக்ஸ்பிரஸ், சுதேசமித்திரன், தினமணி, கல்கி, ஆனந்த விகடன் ஆகியவைகள் முக்கியமான பார்ப்பனப் பத்திரிகைகளேயாகும். இப் பத்திரிகைகள், இன்றைய ஆட்சியைக் கவிழ்க்க முழுமூச்சாகப் பாடுபடுகின்றன. இவைகளுக்கு அனுகூலமாகப் பெரிதும், இந்த நாட்டு இன உணர்ச்சி அற்ற தமிழர்களின் ஆதரவு, என்றே சொல்லலாம். ஆகவே, இன்று, இந்நாட்டுப் பார்ப்பனர், 100-க்கு 100 பேரும், பார்ப்பனப் பத்திரிகைகள், 100-க்கு 100ம், (இந்நாட்டு காங்கிரஸ் தவிர்த்த) மற்ற அரசியல் கட்சிகள், 100-க்கு 100ம், பார்ப்பனரின், ஏகபோக ஆதிக்க ஆட்சி ஏற்படுத்த, காமராசர் ஆட்சியைக் கவிழ்க்க, இடுப்பில் இருக்கும் வேட்டி நழுவுவதைப் பற்றிக்கூடக் கவலை (தங்கள் இனம், மானம், போவதைப் பற்றிய அவமானம்கூட) இல்லாமல், சுத்தச் சண்டித்தனமாகவும், கீழ்த்தரமாகவும் பாடுபடுகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை, காமராசர் ஆட்சி ஒழிந்தால், அந்த இடத்தில் யாருடைய, எந்த மாதிரியான ஆட்சி ஏற்படக் கூடும் என்பதுதான் கவலை.

இந்த, மானமும், நாதியும், இன உணர்ச்சியும், அற்ற நம் சமுதாயத்துக்கு, காமராசர் ஆட்சி ஏற்பட்டது, ஏதோ எதிர்பாராத வாய்ப்பே யாகும். இந்த எதிர்பாராத வாய்ப்பு, மறுபடியும் அமைவதென்பது எதிர்பார்க்க முடியாததேயாகும். காமராசரையே மனதில் கொண்டு, நான், சொல்லவில்லை. இன்றைய சூழ்நிலை, சுற்றுச்சார்பு, மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி, காற்றுவாக்கு முதலியவை, மறுபடியும், யார் என்ன பாடுபட்டாலும், ஏற்பட முடியாதென்றே கருதுகிறேன்.

இன்றைய நிலை, நம் எதிரிகள் எல்லோருமே தோல்வி அடையக் கூடிய நிலையில், இருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், அவர்களைப் பிடித்த "சனி", தோல்வி நிலை, அவர்களது, மதம், கடவுள், சாத்திர, புராணம், இதிகாசங்கள், யாவையுமே பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஒன்றுகூடி நின்று, ஓங்கி, அடிக்க, இதுதான் தக்க சமயம்.

தமிழ் மக்களும், தாய்மாரும், இளைஞர்களும், மாணவர்களும், மற்றெல்லாவற்றையும் ஒத்தி வைத்து விட்டு, பார்ப்பனரைப்போல் கட்டுப்பாடாக, ஒரு தளத்தில், உறுதியுடன், நின்று, இந்த எதிரிகளை, தோல்வி அடையச் செய்வதில், முனைய வேண்டுமென்று வேண்டுகிறேன். பார்ப்பனப் பாம்பை, நாம், இன்று தலையை மிதித்துக் கொண்டு இருக்கிறோம். அதைக் கொல்லாமல், காலை எடுப்போமானால், அவ்வளவுதான்; செத்தோம்.

ஈ. வெ. ராமசாமி.

# காமராசரை ஏன் ஆதரிக்கிறேன்?

சென்னை அரசாங்க வக்கீலாக—கவர்மென்ட் பிளீடர்—திரு. அழகர்சாமி (நாயுடு) அவர்களை, நியமித்தது குறித்து, பார்ப்பனர்கள் உண்டாக்கிய அல்லோலகல்லோலம், தமிழ் மக்களுக்கு, பார்ப்பனப் புத்தி, எப்படிப்பட்டது, பார்ப்பனரது இன உணர்ச்சி, எவ்வளவு ஆழமானது என்பதைச் செம்மையாக உணர்த்திற்று

அந்த ஒரு பதவி, ஒரு தமிழருக்குத் தரப்பட்டதற்காக, அவர்கள் போட்ட கூச்சல், கிளப்பிய கண்டன முழக்கங்கள், நீதிமன்றத்திற்குச் சென்று செய்த "பாலகிருஷ்ண லீலைகள்" எல்லாம், நமக்கு பார்ப்பனப் பண்பு, எத்தன்மையது என்பதை எடுத்துக் காட்டிற்று.

பார்ப்பன வக்கீல்களது, தரக் குறைவான இந்த நடத்தையானது, அவர்களைப் பற்றி, நாம் விளக்க, ஒரு அரிய வாய்ப்பை, நமக்கு அளித்தது,

இவ்வளவுக்குப் பிறகுங்கூட, பார்ப்பனர்களது இந்த முறைகேடான செய்கை, முடிவடைந்ததா என்றால், "அதுதான் இல்லை" என்னும்படியாக, அவர்களது, போக்கு இருக்கிறது என்பதை, அவர்களது சமீபகால நடவடிக்கை, தெள்ளத் தெளியக் காட்டுகிறது.

இந்திய உபகண்டத்தின், மிகப் பெரிய உயர்நீதி சபையாகிய சுப்ரீம் கோர்ட்டின் பிரதம நீதிபதியாக

உள்ள திரு. B. P. சின்ஹா அவர்கள், சமீபத்தில் தென்னாட்டுச் சுற்றுப் பயணம் வந்தபோது, சென்னைக்கும் வந்தார். அவரை அட்வகேட்டுகள் அசோசியேசன் சார்பாக, வரவேற்று உபசரிக்கும் நிகழ்ச்சியில், வரவேற்புரை வழங்கிய அந்த சங்கத்தின் தலைவர் திரு. T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள், பேசும்போது, "வக்கீல்களது உரிமைகளை வெகுவாகப் பாதிக்கப்படுகிற பல காரியங்கள், சமீப காலத்தில் நடைபெற்று வருகின்றன. சட்டத்துறை அதிகாரிகள், நியமன விஷயமாகக் கடைப்பிடிக்கப் பட்ட நீண்டகால சம்பிரதாயம், சென்னை அரசாங்கத்தாரால், சமீபத்தில் உடைக்கப்பட்டது" என்று குறிப்பிட்டார்.

இதன் கருத்து, நோக்கம், என்னவென்றால். சென்னை அரசாங்கத்தாரை, சுப்ரீம் கோர்ட்டின் பிரதம நீதிபதியின் மூலம், நல்லவண்ணம் கண்டிக்க வைப்பதும், வக்கீல்கள் சங்கத்தினருக்கு பாராட்டுகள் பெறவுமாகும் என்பதுதான். ஆனால், அது "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" என்னும் பழமொழி, வைதீகர்கள் சொல்லுவார்களே, அது போல் ஆயிற்று. குரங்காய் முடிந்தது மாத்திரமல்லாமல், அந்தக் குரங்கு இந்த வக்கீல்களது முகத்தைப் பிராண்டியும் தள்ளிப் பாய்ந்துவிட்டது! அவர் ஆணித்தரமான வார்த்தைகளால், இந்த பார்ப்பனர்களது செய்கையைக் கண்டித்ததோடு அல்லாமல், இதனால்தான், அய்க்கோர்ட்டின் மரியாதையே கெட்டுவிட்டது, என்று கூறி, இந்த மாதிரி செய்கை

யை, "அசிங்கமானது" என்றும், வருணித்தார். அவரது பேச்சு, எல்லா (பார்ப்பன) பத்திரிகைகளிலும் வந்துள்ளது என்றாலும். சிலசில பத்திரிகைகள், சில பகுதிகளை, வழக்கம்போல் விட்டுவிட்டன. பார்ப்பனர்களது, இந்தக் கீழ்த்தரமான, இழி செய்கை, வழக்கமானதுதான் என்றாலும்கூட, இன்னொரு எடுத்துக்காட்டு இது, என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

திரு. சின்ஹா பேசிய பேச்சை வெளியிட்டு, இவர்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட ஒரு முக்கிய விசயத்தையும்கூட, பம்பாயிலிருந்து வரும் கடந்த வார 'கரண்ட்' பத்திரிகை (28—12—60) வெளியிட்டுள்ளது.

"You should not have started this ugly, Controversy in the Sacred precincts of the High Court. If you had not done that, all that followed would not have happened."

நீங்கள், இத்தகைய அசிங்கமான கிளர்ச்சிவாதத்தை, அய்க்கோர்ட்டின் புனித எல்லைக்குள் ஆரம்பித்திருக்கக் கூடாது. நீங்கள் அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால், அதைத் தொடர்ந்து, பல சங்கதிகளும் ஏற்பட்டே இருக்காது, என்று தெளிவாகப் பேசியுள்ளார்.

பார்ப்பன வக்கீல்களது, போக்குக்கு, இதைவிட சாட்டையடி வேறு வேண்டுமா? "அதைத் தொடர்ந்து நிகழ்ந்த அத்தனை நிகழ்ச்சிகளுக்கும், பார்ப்பன வக்கீல்களின் போக்கேதான் காரணமேயொழிய,

மற்றவர்கள் அல்ல, என்று விளக்கியல்லவா கூறி விட்டார்.

ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் "பூமிராங்" (Boomerang) என்ற ஒரு கருவி மூலம், (அது அரைவட்ட வடிவில் வளைந்துள்ள மரத்தால் ஆகியது) எவ்வளவு வேகமாக எரிகிறார்களோ, அவ்வளவு வேகமாக, வீசிய இடத்துக்கே அது வந்து சேருமாம். அது போல, இந்தச் செய்கைகள் (Boomerang effect) பூமிராங் பலனை அளித்தன என்பதை, அவர் நன்றாகப் புரிந்துகொண்டு, மற்றவர்களுக்குத் தெரிய விளக்கிவிட்டார்.

திரு. சின்ஹா அவர்களது, இந்த ஆணித்தரமான வக்கீல்களது, போக்குக் கண்டனப் பேச்சிலிருந்து வெளியாகும் கருத்துக்களைப் பற்றிச் சிந்திப்போமானால், நான்கு விசயங்கள் தெளிவாகின்றன.

1. (பார்ப்பன) வக்கீல்களது முறை தவறிய போக்கு.

2. பாலகிருஷ்ண அய்யர் தீர்ப்பு முகவுரை வாசகங்களுக்கு வன்மையான கண்டனம்.

3. சென்னை அரசாங்கத்தின் போக்கு முற்றிலும் சரியானது.

4. இந்தப் பதவிக்கு "நாக்கைத் தொங்கவிட்டு" ஏமாந்த சில பார்ப்பன வக்கீல்களின் ஏமாற்றம்.

பொதுமக்கள் இன்னொன்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது பார்ப்பனர்களது ஆத்திரம், காமராசர் அரசாங்கத்தின்மீது எவ்வளவு என்பதை, இந்த ஒரு சக்தியின் மூலமே மீட்டர் கொண்டு அளந்து விடலாம். 1960 ஜூலையில், நியமனம் ஆன, திரு. அழகர்சாமி பிரச்னையை விடுவதற்கு, அல்லது மறப்பதற்கு, 1960 டிசம்பரிலும்கூட அக்கிரகாரத்தவர்களுக்கு மனம் இல்லை. அவ்வளவு ஆத்திர நெருப்பில் வெந்து புழுங்கிச் செத்துக்கொண்டுள்ளனர், அன்னார்கள், பூதேவர்கள், இந்தக் காமராசர்—அசுரர் ஆட்சியில்.

இந்த அட்வகேட்டுகள் அசோசியேசனில், இப்படிச் சொல்லி "இந்த எலும்பைக் கடிப்பானேன் சொந்தப் பல்லு போவானேன்" என்று அவர்களது நிலைமை ஆனதோடாவது, நிறுத்திக்கொண்டிருக்கலாம், அதுதான் இல்லை:

இந்த அவமானத்தைத் துடைக்கலாம் என்று கருதி, அடுத்த நாள் பார்அசோசியேசனும் அட்வகேட் அசோசியேசனும் சேர்ந்து, பிரதம நீதிபதிக்கு ஒரு விருந்து (டின்னர்) ஏற்பாடு செய்து, அதில் பார் அசோசியேசனுக்கு தலைவராக இருக்கும், திரு. செல்லச்சாமி என்பவரை விட்டு, "நீங்கள் நேற்றுக் கூறிய சில கருத்துக்கள் எவ்வாறு வக்கீல் சங்கத்தின் மதிப்பைப் பாதிக்கத் தக்கதாக உள்ளது',. "சரியானபடி பிரதம நீதிபதி முன்பு விசயங்கள் விளக்கப்பட்டிருந்தால், சென்னை வக்கீல்கள் சங்கங்களின் போக்குக் குறித்து பிரதம நீதிபதி கண்டிக்க

வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது'' என்று பேசினார். அதன் நோக்கம். இந்தக் கூட்டத்திலாவது வேறு விதமான கருத்தை வாங்கலாம், என்று தந்திரமாக, கடைசி முயற்சி, செய்திருக்கிறார்கள் என்று தான் நாம் கொள்ளவேண்டும்.

இதை முழுவதும் கேட்டுவிட்டு பிரதம நீதிபதி திரு. சின்ஹா சொன்ன பதில் இதுதான்:

"நீங்கள், இந்த விசயத்தை கோர்ட்டிற்கு எடுத்துச் செல்லாதிருந்திருப்பீர்களானால், அது சிறந்த முடிவாக இருந்திருக்கலாம்; ஆனால், அப்படிச் செய்யாததால், இச் சிக்கல், அசிங்கமான உருவெடுத்தது. ஏதோ, நல்ல வேளையாக, இரண்டு பக்கங்களிலும் புத்திசாலித்தனம் நிலவியது. இந்தச் சிக்கல் தொடர்ந்து நடைபெற்று இருக்குமானால். விரும்பத்தகாத பலன்கள் ஏற்பட்டிருக்கக் கூடும்.

நான் இன்னும் சொல்லுவேன்; தனிப்பட்ட ஒரு கட்சிக்காரனைப் போலவேதான், அரசாங்கமும் தான் விரும்பும் ஒரு வக்கீலை வைத்துக்கொள்ள முழு உரிமையுண்டு என்று; நான் முன்பு கூறிய அதே கருத்தைத்தான் இன்னமும் கூறுகிறேன் (அதாவது என் கருத்தை மாற்றிக்கொள்ள மாட்டேன் என்கின்ற தன்மை)," என்று ஓங்கி அடித்துப் பார்ப்பனரின் கடைசி நப்பாசையையும் பாழ்படுத்திவிட்டார்.

"நாட்டை இழந்ததோடு நிற்காமல் மனைவியை வைத்துச் சூதாடி அவளையும் இழந்த சூதாட்ட வெறியர்களான பாண்டவர்கள்" கதை, நிலைக்குப் பார்ப்பன வக்கீல்கள் தள்ளப்பட்டார்கள்.

இந்த இரண்டாவது தடவை, பார் அசோசியேஷன் விருந்துப் பேச்சு, அதில் இந்தியப் பிரதம நீதிபதி அளித்த பதில், எதுவுமே இந்த நாட்டுப் பத்திரிகைகளில் வரவில்லை, தங்களுக்குச் சாதகமான விஷயத்தை மறுமுறை அவர் கூறியிருப்பாரானால், எத்தனை கலம், பத்தி, வெளியிட்டு இருக்கும் இந்தப் பார்ப்பன ஏடுகள்! பத்திரிகா தர்ம பத்தினிகளின் யோக்கியதை இப்படி!

இந்தியப் பிரதம நீதிபதி, இந்தக் கருத்துக்களை வெளியிட்டபோது இன்னொரு முக்கிய விசயத்தையும் விளக்கியிருக்கிறார்.

சமீப காலத்தில், நீதிபதிகளின் தரம் குறைந்து விட்டது என்று கூறப்படுவது, ஆதாரமற்ற புகார். அப்படி ஒன்றும் கிடையாது, என்று கூறியுள்ளார். சட்டக் கமிஷன் என்ற அரசாங்கக் கமிஷனின், புகார் குறித்து, மண்டையில் அடித்திருக்கிறார், சட்டக் கமிஷன் தலைவராக, சுப்ரீம் கோர்ட்டிலிருந்து ரிட்டயரான ஒரு சென்னைப் பார்ப்பனர் டி. எல். வெங்கட்ராமய்யரும், செக்ரடரியாக, தற்போது சென்னை அய்க்கோர்ட்டில் ஒரு நீதிபதியாக உள்ள அய். சி எஸ். பார்ப்பனரும். சேர்ந்துதான், தங்களின் சுயநல உணர்ச்சிக்கேற்ப, சிபாரிசுகளை எழுதிக் கொண்டார்கள். அதுதான் கூறுகிறது 1950 லிருந்து நீதிபதிகளின் தரம் குறைந்துவிட்டது'' என்று; காரணம் சாதி பார்த்து நீதிபதிகளை போடுவதாலும், அரசியலார் கருத்து அறிந்து போடுவதாலும் தான் அப்படியாம். அதாவது, தமிழர்கள் ஒரு சிலர், நீதிபதி

பதவிக்கு வர ஆரம்பித்தவுடனே, நீதிபதிகளின் தரமே குறைந்து விடுகிறது, என்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இப்போது இன்னொருபிரச்னையும் கிளப்பி, இம்முயற்சிக்கு உயிரூட்டலாமா, என்று அக்கிரகாரம் சமய சந்தர்ப்பத்தைப் பார்த்து வருகிறது.

அதாவது, மொழி வாரியாக ராஜ்யங்களைப் பிரிக்க சிபாரிசு செய்த கமிஷனின் அறிக்கை ஒரு ராஜ்யத்தில் உள்ள நீதிபதிகளில்,—ஐய்க்கோர்ட் நீதிபதிகள்—மொத்தத்தில் மூன்றில் ஒரு பகுதி, வெளி ராஜ்யத்திலிருந்து எடுத்து நியமிக்கப்படவேண்டும், என்று கூறிற்று. அது வெறும் சிபாரிசு என்பதனால், அதை அமுலாக்குவதற்கு முன்பு, இந்திய பிரதம நீதிபதியின் (சுப்ரீம் கோர்ட்டின் சீஃப் ஜஸ்டிஸ்) கருத்தையும், மத்திய (டெல்லி) ஆட்சியினர் தெரிந்துகொள்ள வேண்டிய அபிப்பிராயம் கேட்ட போது, இதை அத்தனை பேரும் முழுமூச்சுடன் எதிர்த்து, அது முடியாத காரியம் என்பதோடு, தேவையற்ற ஒன்றாகும், என்றும் தெரிவித்தனர். அதன்பேரில், மத்திய அரசாங்கத்தினரும், அவ்வாலோசனையைக் கைவிட்டு விட்டார்கள், என்று பார்லிமெண்டில் உள்நாட்டு (டெல்லி) மந்திரி திரு பந்த் அவர்கள். தெளிவாகக் கூறிவிட்டார்.

சட்டக் கமிஷன் என்கிற பார்ப்பனக் கமிசன், தமிழர்கள் தலையெடுக்க வொட்டாமல் செய்ய இதுவே அருமையான யோசனை—அதாவது மொழி

வாரி ராஜ்யக் கமிசன் சிபாரிசு—என்று கூறிவிட்டு, அகில இந்திய அடிப்படையில் நீதிபதிகளை, ஒரு பட்டியல் தயாரித்து எடுக்க வேண்டுமென்றும், தற்போது உள்ள முறையை, அதாவது மாநில அரசாங்கங்களுக்கு நீதிபதிகள் நியமன விசயத்தில், எவ்வித உரிமையும் இல்லாத வகையில்,—அரசியல் சட்டத்தைத் திருத்தி, ராஜ்ய பிரதம நீதிபதியும், இந்திய பிரதம நீதிபதியும், கலந்துநியமிக்க சிபாரிசு செய்தால் போதுமானது என்றும், இதற்கு அவசியம் என்றால், மந்திரிகளுக்கு நீதிபதிகளைப் பொறுக்குவதில் அதிகாரம் கொடுத்திருப்பதனால், அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சலுகைகள் காட்டுகிறார்கள். சாதி பார்த்தும் நியமிக்கப் படுவதாலும், நீதிபதிகளின் தரம் மிகக் குறைந்துவிட்டது. இத் தரக் குறைவு 1950-லிருந்து துவக்க ஆரம்பித்துவிட்டது, என்று எழுதிவிட்டது.

இது, ஒரு ஆதாரமற்ற பொய்யான, புகார் என்று டெல்வி மந்திரி திரு. பந்த் அவர்களும், சட்ட மந்திரி திரு. ஏ. கே. சென் அவர்களும், நம் நாட்டு சட்ட மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், முறையே பார்லிமெண்டிலும், சட்டசபையிலும், முன்பே தெரிவித்திருக்கிறார்கள். இதைப்பற்றி "நீதி கெட்டது யாரால்?" என்றும் நான் முன்பே எழுதியிருக்கிறேன்.

இப்போது, திரு. பந்த் அவர்கள், சொன்ன பதிலைக் கேட்டு, பார்ப்பனப் பாதுகாப்புச் சங்கத்தின் ஒலிபெருக்கியான "இந்து" பத்திரிகை, அதிருப்தி அடைந்து, மொழிராஜ்யக் கமிசன், சட்டக் கமிசன் சிபாரிசுகளை எப்படியாவது அமுலாக்கிவிட வேண்டும், மறுபடியும் டெல்லி எப்படியாவது

1. மூன்றில் ஒருபாகம் வெளிராஜ்ய நீதிபதி களைப் பொறுக்குதல்,

2. அகில இந்திய பட்டியல் தயாரித்து அதன் மூலம் நீதிபதிகளை டெல்லி நியமித்தல்—

ஆகிய இரண்டு ஆலோசனைகளை, அமூலாக்கி விட வேண்டும் என்று, தனது 16—12—1960 பத்திரி கையில் தலையங்கம் தீட்டுகிறது. அவ்வளவு அக்கறை காட்டுகிறது 'இந்து' பத்திரிகை !

இத்தகைய பார்ப்பன சூழ்ச்சிக்கு, அடிப்படை யான காரணம் என்னவென்றால், இதுவரை நீதிபதி ஸ்தானத்தையே எட்டிப் பார்க்கமுடியாமல் இருந்த "சூத்திரர்கள்"—தமிழர்கள்—சமீப பத்து ஆண்டு காலத்தில், பலர் அய்க்கோர்ட்டில் நீ தி ப தி க ள ா க வந்து விட்டார்கள். அதுவும், திரு. காமராசர் அரசாங் கத்தில், ஒரளவுக்கு சமநீதி வாய்ப்புப்படி, நீதிபதி நிய மனம் நடத்தப் பெறுவதுதான் ஆகும்.

கடந்த 10 ஆண்டு காலத்தில்தான் தமிழர்களாகிய

1 திரு. — சோமசுந்தரம் (பிள்ளை)
2 ,, — இராமசாமி (கவுண்டர்)
3 ,, — சுப்பிரமணிய (நாடார்)
4 ,, — கணபதியா (பிள்ளை)
5 ,, — வீராசாமி (நாயுடு)
6 ,, — கைலாசம் (கவுண்டர்)
7 ,, — வெங்கடாத்திரி (நாயுடு), போன்ற

வர்கள் மளமளவென்று உயர்நீதி மன்றத்தில் அமரும் வாய்ப்பு ஏற்பட்டது. இன்றும்கூட, 12 நீதிபதிகளில் 6 பேர் பார்ப்பனர்கள் இ ரு க் கி றா ர் க ள். அது அவர்கள், விகிதாச்சாரத்திற்கு மிகவும் அதிகப்பட்ட தாகும். 100-க்கு 3 பேர் உள்ள சமூகத்திற்கு 50 சத வீகிதம் அவர்களும், மற்ற 100-க்கு 97 பேர் 'உள்

சமூகத்திற்கு எல்லோருமாக 50 சதவிகிதம் இருக்கும் இன்றைய நிலை இருக்கிறது. இதுவே கொடுமை தான். வகுப்பு வாரி உரிமை அடிப்படையில் பார்ப் போமானால், 100க்கு 100 அனுபவித்த அவர்களுக்கு 50 வீதம் குறைந்து. அதிலும் "சூத்திரர்கள்" அந்த இடங்களைப் பிடித்து, நமக்குச் சமமாக வந்து உட் காருவதா, என்ற ஆத்திர உணர்ச்சிதான், இவ்வளவு மாபெரும் கூப்பாட்டிற்குக் காரணமாகும்.

பார்ப்பன கமிசனாகிய சட்டக் கமிசனின், "நீதி பதிகளின் தரம் குறைந்தது", என்பது ஆதாரமற்றது என்பதைச் சமீபத்தில் தென்னாடு வந்த சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியான திரு B. P. சின்ஹா அவர்களும் கூறியிருக்கிறார்கள் பார்ப்பனர்களின் நாணயக் கேட்டிற்கு, பொய்ப் பிரச்சாரத்திற்கு, இதைவிடச் சரியான சவுக்கடி, வேறு என்னவேண் டும்?

அதோடு மாத்திரமில்லை; ராஜ்யங்களில் உள்ள சர்வீஸ் கமிசன் தலைவரையும், மற்ற உறுப்பினர் களையும், (அந்த அந்த ராஜ்ய மந்திரிகள் சிபாரிசின் பேரில்) நியமிக்கின்ற, இன்றைய முறையையும்கூட, மாற்றிவிட்டு, இவர்களை, டில்லியே, நேரடியாக நிய மிக்க வேண்டுமென. சமீபத்தில், பெங்களூரில் பேசிய, பார்லிமெண்டின் "லோக் சபையின்" தலைவரான, திரு. அனந்தசயனம் அய்யங்கார், என்ற பார்ப்பனர், "திடீரென" ஒரு வெடியைத் தூக்கி, முதலில் வீசி யுள்ளார். திடீரென, இப்படி, ஒரு புதிய யோசனை யை, வெளியிட வேண்டிய அவசியம், அவருக்கு ஏன் ஏற்பட்டது, என்று கருதுவோமானால், தமிழ் நாட் டில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர், உறுப்பினர் கள் எல்லாம் சூத்திரர்களாகவே இருந்து "சூத்திரர் கள்" அதிக அளவு பதவிக்கு, உத்யோகத்திற்கு வரு

3/6



வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிட்டதே, என்ற அங்கலாய்ப்பும் அதை ஒழித்துக்கட்டுவது எப்படி, என்ற கவலைதான்.

இதற்கு, ஒரு முக்கிய அடிப்படை திரு. காமராசர் ஆட்சி என்பது; அது அசைக்க முடியாத, நிலையில், மற்ற நாட்டுக்காரர்கள் பாராட்டப்படும் வகையில் நடைபெற்று வருவதனால், அதை ஒழிக்கச் செய்யும் முயற்சிகள் கிட்டாமல், சிதறுண்டு விடுவதும், "அடுத்த பத்துப் பதினைந்து ஆண்டுகட்கு அவரது ஆட்சிதான், தமிழ் நாட்டில் வேறு யாரும் நினைக்கக் கூடாது" என்று உணர்ந்து இருப்பதனால், சட்ட, விதிமுறைகளையாவது மாற்றி, தமிழர்கள் "படையெடுப்பைத்" தடுக்க வகை செய்யலாம், என்று கருதி திட்டமிட்டு, வேலை செய்து வருகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையையும், எதிர்த்து திட்டமிட்டு, நடத்தப் பெறும் பார்ப்பன சதியாளர்களின், இந்த எண்ணத்தையும் புரிந்து கொண்டு, நமது இனத்தின் எதிர்கால நலனைப் பற்றிக் கவலையடையவும், தக்கது செய்யவும், நம் நாட்டுப் பொது வாழ்க்கையில், உள்ளவர்களில் திரு. காமராசரைத் தவிர, வேறு யாராவது இருக்கிறார்களா? இருக்க முடியுமா?

தேடிப் பார்த்து, பிறகு, நாங்கள் (திராவிட கழகத்தார்) திரு. காமராசரை ஆதரிப்பதும், அவரை ஒழிக்கப் பாடுபடுபவர்களை எதிர்ப்பதும், நேர்மையும் அவசியமும் ஆன காரியமா? இல்லையா? என்பது பற்றி, முடிவுக்கு வாருங்கள்!

ஈ. வெ. ராமசாமி.